1494

1494

ஜகன்மோகினி

ஆசிரியை
ஸ்ரீ வை. மு. கோதைநாயகி அம்மாள்.

மலர் 11	1934 ஹு மே மீ	இதழ் 6

21 SEP 1934



"எத்தனை ஜன்மங்கள்
வந்து பிறந்தாலும்
இந்திய மண்ணிடை
வேண்டுவனே."

முழு விவரங்களுக்கு உள்ளே பார்க்கவும்.

JL
ஹ2ங,N223M
N34·11·6.
182966

"ஜகன்மோகினி" ஆபீஸ்
...ரடித்தெரு திருவல்லிக்கேணி
சென்னை.

தனிப்பிரதி
விலை
அணா 2.

தேசபக்தி ததும்பும் பாடல்

மஹாத்மா காந்தியின் பிரார்த்தனை கீதமாகிய "சொல்லுவம் வைஷ்ணவன்" என்ற பாட்டைப் பாடியுள்ள ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாள் இப்பொழுது காந்திஜிக்கு மிகவும் பிரியமான மற்றொரு தேசிய உணர்ச்சி ததும்பும் பாடலை, தமது முழுத் திறமையையுங் காட்டி ராகமாலிகையாகப் பாடியிருக்கிறார்கள். இதற்கு முன் போல எலெக்டிரிபை செய்யாமல் அவர்களது இயற்கையான இனிய சாரீரத்தில் சுத்தமாயும், அழகாயும் இந்த ரிகார்டு அமைந்துள்ளது.

பாரத நாட்டின் மக்கள் ஒவ்வொருவரும் எப்படி வாழவேண்டும் என்பதை விவரித்துள்ள பாடலை ஸ்ரீமான் சங்கு. சுப்ரஹ்மணியன் தேச பக்தியை யூட்டக்கூடிய வழியில் மொழி பெயர்த்துள்ளார்.

நாங்கள் என்ன சொல்லுகிறோமென்றால் தமிழ் மக்கள் ஒவ்வொருவரிடமும் இந்த உன்னதமான ரிகார்டு இருந்தே தீரவேண்டுமென்று வற்புறுத்துகிறோம்.

G. E. 289. "எத்தனை ஜன்மங்கள்." ராகமாலிகை. ரூ. 2—12—0.

உங்களது ஆசிரியை—பாடகரின்
மற்ற ரிகார்டுகளையும் கேட்டானந்தியுங்கள்

GE 197	ஏழைமுகம் பாரய்யா - ஸிந்து பைரவி போகுது பார் பணம் - நட பைரவி	விலை ரூ. 2-12-0
GE 205	சொல்லுவம் வைஷ்ணவன் -பியாக் சத்யாக்ரகத்தியாகி - மாண்ட்	விலை ரூ. 2-12-0
GE 222	வேட்கமில்லையோ மனத்தில்-பியாக் தாயே தந்தை யென்றும்-ராகமாலிகை	விலை ரூ. 2-12-0
GE 236	ஸந்தேகமு யாலரா 1. - கல்யாணி " 2. - "	விலை ரூ. 2-12-0

ஆர்வ்ஸ் கொலம்பியா ஹவுஸ்,

மதருஸ்

எல்லா "கொலம்பியா" ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.


"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"
"His Master's Voice"
பாடகர் தான் மறைந்து யிருக்கிறார் போல் யிருக்கிறதே!
"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" கிராமபோன் மிகவும் சாஸ்த்ரீகமாக செய்யபட்டதில்லையோ?
இதன் விலையென்ன? நானும் யிந்த மிஷினை வாங்க யோசிக்கிறேன்
JAFFER
எத்தனை இடங்களில் இம்மாதிரி பேச்சுகள் நடக்கின்றன இதன் உண்மை பரி-
சோதிக்க தங்கள் பக்கத்திலுள்ள
"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" வியாபாரியிடம்
நேரில் கேட்டால் தெரியவரும்.

பொங்கலோ பொங்கல்! ::

:: போகியோ போகி!

வருடத்திற் கொருமுறை பொங்கல் பண்டிகை யன்று மட்டும் நாம் அதன் வைபவப் பாடலேயும், ஆரவாரத்தையும் கண்டு மகிழ்கிறோம்; ஆனால் இந்த அருமையான பொங்கல் ரிகார்டை நீங்கள் வாங்கி விட்டால் தினம் அந்த ஆனந்தத்தில் மூழ்கிக்கொண்டே இருக்கலாம். அதன் பின்புறமுள்ள குருவிக்காரியின் பாட்டும் பேச்சும், நாய் குலேப்பதும், குரங்கு கத்துவதும் உங்களைக் குலுங்கச் சிரிக்கச் செய்யும் என்பதில் ஐயமே இல்லை. உடனே அதை வாங்கி ஆனந்தியுங்கள்.

G. E. 234. ... ரூ. 2—12—0.

கல்யாணமே! வைபோகமே!

கல்யாண மாதம் நடைபெறுகின்றது. சில வீடுகளிலேயே மேளம் முழங்குகின்றது. அதைப் பார்க்கும் மற்றவர்களுக்கு 'நம் வீட்டிலும் கல்யாணம் வரவில்லையே' என்று ஏக்கமுண்டாகின்றது. அந்த ஏக்கத்தைப் போக்குவதற்கு "கௌரி கல்யாணமே! வைபோகமே." என்ற 'கோலம்பியா' ரிகார்ட்டை (G. E. 269 ரூ. 2—12.) வாங்கி வைத்தால் நித்ய கல்யாண வைபோகமாகவே உங்கள் வீடு இருக்கும். உடனே வாங்கி மகிழுங்கள்.

ஆர்ஸ் கொலம்பியா ஹவுஸ்

மதராஸ்

எல்லா "கோலம்பியா" ஏஜன்டுகளிடமும் கிடைக்கும்.

11-வது அதிகாரம்

கவலைக் கொந்தளிப்பு—காதல் சந்திப்பு

சர்வோத்தமரைப் பற்றிப் புகழாத மனிதர்கள் விரல் விட்டு எண்ணும் வகையில் தவிர வேறு கிடையாது என்பது ஜகப் பிரசித்தமன்றோ! வாஸுதேவன் அதை அதிகமாக அறியாத போதிலும் சமீபத்தில் தெரிந்து கொண்டதிலிருந்தும், உத்தமரைப் பார்த்ததிலிருந்தும் ஏதோ ஒரு தெய்வம்போலத் தோன்றிவிட்டது. அதே சமயம் ஜகஜ்ஜோதியாகக் காக்ஷி கொடுத்த மோகனங்கியைப் பார்த்ததும் பிரமித்து நின்று விட்டவன் சில வினாடிக்குள் தன்னினைவைப் பெற்றான்.

"அப்பா! வாஸுதேவா! என் இப்படி பிரமை பிடித்துவிட்டாய்! ஒவ்வொரு வேலைக்காரனும் தன் வேலைகளை ஒழுங்காகச் செய்கிறானா என்பதைப் பரீக்ஷிப்பதற்கு நான் ஒவ்வொரு தர்ம ஸ்தாபனத்திலும் ஆள் வைத்துப் பார்த்தேன். படிக்குப் பாதி மோசமாக விருந்தது. அதை யறிந்தபிறகு எவ்வாறு வைத்துக்கொள்வது? அவர்களை எல்லாம் விலக்கிவிட்டேன். வேறு ஆட்களுக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். நீ அவசரப்பட்டுவிட்டாயே! என்ன செய்வது?" என்றார் உத்தமர்.

வாஸு:—பிரபோ! எனது ஸ்திதியை நான் கூறவேண்டுவதில்லை. என்னைப் பார்க்கும்போதே தெரிந்துகொள்ளலாம். வறு

சொல்லும் காரியத்தைச் சிறுவர்கள் உடனே செய்தால் பெரியோருக்குத் திருப்தி யுண்டாகிறது. இந்த உணர்ச்சியை அறியாத பிள்ளைகள் வேண்டுமென்றே காரியத்தைச் செய்திருந்தும், செய்யவில்லை என்று முதலில் கூறிப் பெரியோர்களின் கோபத்தைப் பெருக்கி வேடிக்கை பார்ப்பதோடு, தாமும் வசவு வாங்குவது அவர்களின் தமாஷ் போலும்.

மையே எங்கள் குலதெய்வம். அத்தேவதை எங்களை விட்டு விலகுவதே கிடையாது. என்னை விருத்திக்குக் கொண்டுவரும் பொருட்டு என் தாயார் பட்ட சிரமத்தை அக் கடவுள் தானறியவேண்டும். பல இரவு பகல்கள் பட்டினி கிடந்து, பல வீடுகளில் வேலை செய்து, முட்டை தூக்கித் தன் தேகத்தைச் செருப்பாக உழைத்து என்னை முன்னுக்குக் கொண்டு வந்த அன்னைக்கு நான் என்றுதான் ஈடு செய்ய முடியும்? இந்த சொல்ப வருமானம் நின்று விட்ட உடனே எங்கள் ஜீவனம் நடக்கும் மார்க்க மேது? மீண்டும் என் தாயைப் பட்டினி போடுவது நியாயமா! கிடைத்த வேலை எதுவாயினும்—கக்கூஸ் வாரும் வேலையாயினும்—கடவுளிடம் பக்தியுடன் சத்திய மார்க்கத்தில் செய்து என் தாயை—என்னை ஈன்ற தெய்வத்தை—நான் காக்கவேண்டியது என் கடமை இல்லையா! இச் செய்தியை அறிந்த என் அன்னையே எனக்கு வேறு வேலையைத் தேடிக் கொடுத்தாள். என் முன்னறி தெய்வத்தின் வாக்கின்படி நான் நடக்கவேண்டியது எனது கடமையல்லவா?

உத்தமர்:—அடாடா! இப்போதென்ன முழுகிப் போய்விட்டது. 'எனக்கு அதே வேலை நிச்சயமாகிவிட்டது. நான் அங்கேயே இருக்கப் போகிறேன். இது வேண்டாம்' என்று கூறிவிடலாமன்றோ?

வாஸு:—அது எப்படி முடியும்? என் தாயார், தகப்பனார் முதல் கையொப்பமிட்டு இத்தனை வருடத்திற்கென்று அச் செட்டியார் எழுதி வாங்கிக் கொண்டிருக்கிறாரே; அது பெரிய பந்தமாகிவிட்டதே. இனி அந்த கெடுவு முடியும் வரையில் சட்டப்படி நான் உழைத்தே தீரவேண்டு மல்லவா? 15-ம் தேதி என்று தாங்கள் கெடு வைத்துக் கடிதம் எழுதியபடி நான் அதற்குள் இடம் பார்க்க வேண்டிய பொறுப்புடையவனாக இல்லையா? தங்களுடைய அக் கடிதமன்றோ எங்களைக் கலக்கிவிட்டது.

ஒரு பெரிய பிரஸங்கியார் "அதிகமாக மாமிஸம் சாப்பிடுவதுதான் முக்கியம்" என்று ஒரு கூட்டத்தில் ஆரவாரமாகப் பேசினார். அதே பிரசங்கியாரின் பெயர் கொட்டை எழுத்தில் கீழ்க்கண்டபடி காணப்பட்டது. "புலால் மறுப்புச் சங்கத்தின் ஆதரவில் புலாலைத் திரஸ்கரித்தல்,

உத்தமர்:—வாஸ்தவம். இருக்கலாமப்பா! நான் அம்மாதிரி யான கடிதம் அனுப்பிய பிறகு என் வேலையை எவனொருவன் ஒழுங் காகச் செய்கிறானோ அவனன்றோ மகா யோக்யன் என்று நான் தெரிந்துகொள்ள முடியும். 'நம்மைத்தான் போகச் சொல்லிவிட் டானே: இதை நாம் ஏன் சரியாகச் செய்யவேண்டும். எப்படியாவது போகட்டும்' என்று இருப்பவர்களை எல்லாம் அனுப்பிவிட்டேன். அந்த செட்டியாரிடம் நீங்கள் சொல்லிப் பார்த்தால் ஒன்றும் முடி யாதோ?

வாஸு:—ஒப்பந்தம் முடிந்த பிறகு எங்ஙனம் முடியும்? மேலும் அந்த செட்டியார் 'மகா லோபி, முன்கோபி, பேராசைக்காரர்.' என்பது உலகப் பிரசித்தியான விஷயம். ஆகையால் வீண் மனஸ்தா பத்திற்கு நியாய விரோதமாக எப்படி நிற்பது? என்னுடைய பிராப்தம் இவ்வளவுதான். சத்தியத்தையே துணையாகக் கொண்டு நடக்கும் உங்களுக்கு நான் என்ன சொல்லவேண்டும். என் விதி எவ்வாறு அமைந்திருக்கிறதோ? அவ்வாறெல்லாம் இழுத்துச் செல் வது சகஜமன்றோ: நான் மகா கொடிய அபாக்யவான் என்பது என் பிறவியிலிருந்தே தெரியவில்லையா? அது தொடர்ந்துகொண்டே வரு கிறது. மகாத்மாவாகிய தங்களிடம் ஊழியம் செய்யும் பாக்யம் பெறு தொழிந்தேன்.'' என்று கூறும்போதே கண்ணீர் மளமள வென்று உதிர்ந்தது.

தர்மத்தையும் நியாயத்தையும் ஓர் அணுவும் பிசகாத உத்தமர் அனியாய வழியில் நடக்கும்படி உபதேசிப்பாரா? அங்ஙனம் கூறத் தான் மனந் துணியுமா? தான் ஒன்று நினைக்கத் தன்னை யாளும் ஈசன் ஒன்று நினைத்துவிட்டாரே என்று சிந்தித்தார். மகா யோக்யமான மனிதன் ஆசிரமத்தை விட்டுப் பிரிகிறானே என்ற விசனமும் பாதிக் கிறது. என்ன செய்வது? சரி; வாஸு! உன்னுடைய உத்தம வழி யின் நோக்கத்தைக் காணக் காண என் மனம் பூரிக்கிறது. நீ சொல்

புலாலின் தீமை'' என்ற விஷயத்தைப்பற்றி.........இன்னார் பேசுவார் கள்'' என்பதாம். என்ன வேடிக்கை இது? இப்படித்தான் ஒற்றுமை யற்று பிரிவினையுற்றுப் பிறர் நகைக்க ஏதுவாகிவிடுகின்றது.

வது போல உன்னை வைத்துக் கொண்டிருக்க எனக்கு பாக்யமில்லை. இக்காலத்தில் யோக்யமாயும், உத்தமமாயும் மனிதர்கள் அகப்படுவது குதிரைக் கொம்பாக விருக்கிறது. அப்படியும் ஒரு மனிதன் கிடைத்தால் இப்படித்தான் ஆகும்...சரி இவ்வளவுதான் தற்காலத்து பாக்யம். அங்குள்ள ஒப்பந்தம் முடிந்தவுடனே நான் உன்னைக் கவனிக்கின்றேன். இதனால் என்னை மறந்துவிடாதே! அடிக்கடி வந்துகொண்டிரு. விளையாட்டாகச் செய்தது வினையாகிவிட்டது. இதுவும் கடவுளின் ஒரு திவ்விய சோதனையே யாகும். எல்லாம் அவன் செயல். எல்லாம் நன்மைக்கே என்று நம்புகிறவர்களுக்கு என்றும் பயமில்லை. சரி. நான் வரட்டுமா! அதோ யாரோ காத்துக் கொண்டிருக்கிறார்கள்.'' என்று கூறியபடி வாஸுவைத் தட்டிக்கொடுத்தார்.

வாஸுவும் அடக்கக்கூடாத விசனத்துடன் "ஐயன்மீர்! நானும் விடை பெற்றுக் கொள்ளுகிறேன். இந்த ஏழையை மறக்கக் கூடாது.'' என்று கண்ணீர் ததும்பக் கூறி சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து விட்டு நாக்குழற தடுமாற்றத்துடன் "போய்விட்டு வருகிறேன்.'' என்று கூறினான். அதே சமயம் முன்பு பார்த்த ஜன்னலைக் கவனித்தான். அங்கு இன்ப மணியின் எழிலார் பிம்பம் கண் முன்பு தோன்றியது. அதை உற்று கவனிக்க இவன் மனம் தூண்டியது. அவ்வாறு கவனிக்கையில் அது உயிருடன் கூடிய பிம்பமல்ல. சித்திரித்த உருவம் என்பதை அப்போதுதான் தெரிந்துகொண்டான்.

உத்தமர் எதிரிலிருக்கையில் தான் வேறு ஒன்றைக் கூர்ந்து கவனிப்பது கூடாதென்று தெரிந்துகொண்டு மெல்ல அவ்விடம் விட்டுப் புறப்பட்டு ஆசிரமத்திற்கு வந்தான்.

அவன் மனமோ அலை பாய்கிறது. துக்கமோ தொண்டையை அடைக்கிறது; கண்களோ நீரைக் கக்குகின்றன. இத்தனை லக்ஷணத்துடன் தலைவியின் இருப்பிடம் சென்று நமஸ்கரித்து விட்டு "தாயே!

இரகசியமாக வைத்துள்ள வைப்பாட்டியுடன் தன்னைக் காண நேர்ந்த சிநேகிதர்கட்கு 'இவளே என் மனைவி' என்று வாய் கூசாது சொல்லிவிட, பிறகொரு சமயம் அச் சிநேகிதர்கள் அம்மனிதனின் உற

தலைவியரே! இன்றோடு இவ்வாசிரமத்திற்கும் எனக்கும் பிரிவுகாலம் வந்துவிட்டது. இம்மட்டும்தான் இத்தகைய புனிதமான இடத்தில் உழைக்கப் பிராப்த மிருந்தது. இனிமேல் என் விதி என்னை வேறு வழியில் இழுத்துவிட்டது. நான் சென்று வருகிறேன். குழந்தைகளே! நான் சென்று வருகிறேன். என்னை மறக்காதீர்கள். என்னாயுள் காலம் முற்றும், நான் இருப்பிடம் வேறாக விருப்பினும் இவ்வழகிய ஆசிரமத்தையும் உங்களையும் மறக்கமாட்டேன். சென்று வருகிறேன்'' என்றான்.

அம்மொழியைக் கேட்ட தலைவியும், இன்னும் சில குழந்தைகளும் விசனமுற்று, "தங்களையா எஜமானர் விலக்கிவிட்டார்? ஐயோ! உங்களைப்போன்ற உத்தமமானவர்கள் கிடைப்பது அரிதாயிற்றே! எஜமானர் உங்களை எடுக்கவே மாட்டார் என்றல்லவோ எண்ணி இருந்தோம். தங்களை அவரே நேரிலா போகச்சொன்னார்?'' என்று தலைவி கேட்டாள்.

வாஸ:—தாயே! என்னுடைய ஊழ்வினை என்னை எப்படி ஆட்டுகிறதோ அப்படித்தானே நடக்கும். எனக்கு இப் புனிதமான காரியம் செய்ய பாக்யமில்லை. ஏதோ ஒரு தொழிலைச் செய்து என் தாய் தந்தையை நான் ரக்ஷிக்கக் கடமைப் பட்டிருப்ப தொன்றைத்தான் எனது கருமமாக எண்ணுகிறேன். சென்று வரட்டுமா! முடிந்தால் அவ்வப்போது வருகிறேன். குழந்தைகாள்! என்னை மறந்துவிடாதீர்கள்.—என்று அவர்களில் சிலரைத் தூக்கி சீராட்டிப் பின் தலைவியிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு தன் வீட்டிற்கு வந்தான்.

நடந்த விஷயங்களைத் தாயாரிடம் கூறினான். தாயார் காரியம் மிஞ்சிப் போய்விட்டதே என்று விசனப்பட்டாள். அன்று செல்ல மறு தினமே செட்டியாரின் தோட்ட வேலையின் மானேஜராகப் போய்ச் சேர்ந்தான். தோட்டம் சுமார் ஒரு மைல் விஸ்தீரண

விஜயரைக் காணும்போது 'இன்னாருடைய மனைவியை வேறோர் மனிதனோடு பார்த்தோ'மென்று கூறிவிட, அப்போது குட்டு வெளியாகிவிடுகிறது.

முள்ளது. அதில் அனேக காய்கறிகள், கனிவகைகள், புஷ்ப வகைகள், க்ரோட்டன்ஸ் ஜாதிகள் எல்லா மிருக்கின்றன. அவைகளைப் பயிரிட்டுப் பாதுகாத்து காய் கனி புஷ்பங்களை விலைக்குக் கொடுத்து அன்றாடம் கணக்கெழுதி பணத்தைச் செட்டியாரின் குமாஸ்தாவிடம் ஒப்புவிக்கவேண்டும். இவைதான் முக்யமான வேலைகள்.

நமது வாஸுவோ அங்குள்ள சாமான்களில் ஒரு அணுவும் தனக்கெனத் தொடமாட்டான். வாழையிலைச் சிறகுகள் கிழிந்து காற்றிலாடினாலும் அவற்றைக் கண்ணால் பார்க்கமாட்டான். தனக்குள்ள வேலைகளை வெகு ஒழுங்காகக் கவனித்து வந்தான். அவனுடைய வேலை மாலை 5 மணியுடன் முடிந்துவிடும். அதற்குப் பிறகுதான் பழகிய ஆசிரமத்திற்குச் சென்று பார்த்துவிட்டு வருவான்.

உத்தமர் வீட்டிற்கு அடிக்கடி செல்வதற்கு ஆசைதான். ஆனால் அவருடைய அந்தஸ்திற்கும், தன்னுடைய நிலைமைக்கும் அடிக்கடி அங்கு சென்றால் எப்படி இருக்குமோ என்கிற வெட்கம் ஒரு புறம் பாதிக்கிறது. எனினும் தன்னை சோதிக்கும் பொருட்டுக் கள்ளியாக அனுப்பிய உருவம் உண்மையிலேயே கள்ளியாக—கொள்ளை கொள்ளும் கொடிய பொருளாக—அமைந்து விட்டதால் அந்த ஆச்சரியத்தை எண்ணி எண்ணி மனத்திற்குள் அடக்க முடியாத வியப்பை யடைவான். அதையே ஓர் இன்பமாக எண்ணி மகிழ்வான்.

செட்டியாரின் தோட்ட வேலைகள் பல பாகங்களிலிருப்பதால் ஒரு பாகத்திலுள்ள தோட்ட வேலைக்குச் செல்வதற்கு பிற்பகல் மூன்று மணியாகும். அந்த வேலையை முடித்துக்கொண்டு திரும்பு

ஊரை ஏமாற்றி உலையில் போடுவதையே தன் தொழிலாகக் கொண்டுள்ள எந்த ஆணோ, பெண்ணோ, தானும் சுகப்படுவதில்லை; ஒருவரிடமும் நீடித்த சிநேகமும் செய்வதில்லை. எங்கு பார்த்தாலும் சண்டை, மனஸ்தாபம் தான்.

வதற்கு 5 மணி யாகும். அந்த தோட்டத்திலிருந்து இவன் வீட்டிற்குப் போகும்போது உத்தமரின் பங்களாவைக் கடந்துதான் செல்ல வேண்டும். அவ்வாறு செல்லும்போது அந்த பங்களாவையும் அத் தோட்டத்தையும் உற்று கவனித்துக் கொண்டே செல்வான். ப்ரதி தினமும் அந்த வேளையில் உத்தமரின் தோட்டத்திலிருந்து ஆநந்தமாகப் பாடும் குயிலினும் இனிய குரலின் கானம் கேட்கும். அதைக் கேட்டுப் பரவசமுற்று "ஆகா! என்ன அழகிய சாரீரம்! தேவகானம் போல விருக்கிறதே!" என்று தனக்குள் எண்ணியபடி கேட்டு விட்டுப் போவான்.

இக் கானத்தின் கவர்ச்சித் தன்மை அவனை தினந்தோறும் அவ்விடத்திற்கு இழுத்துச் செல்லும். நாளடைவில் ஒரு தினம் தன் வேலையின் நிமித்தம் போவதற்கு முடியாது போய்விட்டால் அன்று மனது சமாதான மடையாது தவிக்கும். அந்த தேவகானம் இத் தோட்டத்தில் யார் செய்கிறார்கள் என்று அவனால் கண்டுகொள்ள முடியவில்லை. உத்தமரின் பங்களாவைச் சார்ந்த தோட்டம் என்று மட்டும் திட்டமாகத் தெரியும். சில தினங்கள் வீணை முதலிய வாத்யங்கள் கேட்கும். அந்த இன்னிசை கானத்தைக் கேட்டுப் பயித்தியம் பிடித்தவன்போல தோட்டத்து ஒரு புறம் மதிலண்டையில் நிற்பான்.

அச்சமயம் அவனை யாராவது பார்த்தால் சந்தேகமின்றி பயித்தியமென்றும், ஏதோ அடித்துக்கொண்டு போக வந்து அவ்வாறு பதுங்கிப் பதுங்கி நிற்கிறான் என்றும் கூறி விடுவார்கள். கானத்தின் வயப்படாதவர்கள் யார் இருக்கிறார்கள்? வாயற்ற, ஆறறிவற்ற பறவை இனங்களேயும், பசுவின் இனங்களேயும் தன் வயப் படுத்தி இழுத்துக் கொள்ளும் அபார சக்தி வாய்ந்த கானத்திற்கு மனிதன் கட்டுப்படுவது ஓர் வியப்பா!

ஒரு வியாபாரத்தின் ரகஸியத்தை யறியும்பொருட்டே சிலர் அந்த வியாபார ஸ்தலத்தில் வேலையிலிருந்து அதிலுள்ள சகல நோக்கங்களேயும் கிரகித்துக்கொண்டு அதற்கு எதிரிடையாக வேறு ஒன்று ஸ்தாபிக்கத் துணிந்து விடுகிறார்கள். இது நம்பிக்கைத் துரோகமா? சுயநலத் தனமா?

வாஸு இயற்கையிலேயே மிகவும் பயந்த சுபாவ முடையவன். அபாரமான லஜ்ஜை யுடையவன். உத்தமர் அவனை வரச் சொல்லி இருந்தும் இவ் விரண்டின் காரணமாகப் போக அஞ்சினான். தன் தோட்டத்தில் விலையான காய் கரி முதலிய சகலத்தின் பணத்தையும் எஜமானனுடைய குமாஸ்தாவிடமே செலுத்தி விடுவான்.

"என் புளுகு கோணிப் புளுகு. என் அண்ணன் புளுகு பீப்பாய் புளுகு. எங்கப்பன் புளுகு வண்டிப் புளுகு அது பின்னாலே வண்டியோடு வருகிறது.'' என்று ஓர் பழய வசனம் உண்டு. அது போல மேற்குறித்த மூன்றையும் சேர்த்து இந்த குமாஸ்தா ஒருவனே அமைந்திருக்கிறான். அவனுடைய பெருமையைக் கூறத் திறமே யன்று. செட்டியாரை எவ்விதமோ தலையைத் தடவி இவ்விடம் வேலைக்கு அமர்ந்து விட்டான். அவனுக்குத் தெரிந்த தந்திரங்கள் ஓர் அரசாங்கத்திற்குக் கூடத் தெரியாதெனலாம்.

அவனுடைய தொழில் ஊரை ஏமாற்றி உலையில் போடுவதும், சற்றும் வாய் கூசாது பொய்யுரைத்து இல்லாத ஒன்றை சாதிப்பதும், இருப்பதொன்றை மறைப்பதும், இருப்பதையும் இல்லாததையும் சேர்த்து முடிபோட்டு ஸ்தாபிப்பதும், பொய் சாக்ஷிகள் கூறிப் பிரமாணம் செய்வதும், கள்ளக் கையொப்பமிடுவதும், குடியைக் கெடுப்பதும் போலீஸ்காரனுக்கு உளவாக விருந்து தனக்கு ஆகாதவர்களை எல்லாம் ஏதோ ஒரு சாக்கு வைத்து அவர்களை தண்டிக்கச் செய்வதும் இதுபோன்ற தீய காரியங்களில் நம்பர் ஒன்றாக விளங்கும் பரம சிகாமணி.

அவன் இங்கு தோட்டத்திலிருந்து காயாய்; கரியாய், கனியாய் அபகரித்துக்கொண்டு போய் விடுவான். இதற்கு முன்பு இருந்த சகலருக்கும் இவனிடம் பயமாதலால் பார்த்தும் பாராது

"எவரையும் எளிதில் நம்பி ஏமாறாதே; உஷார்! உஷார்!'' என்று பிறரை எச்சரித்த மனிதர்களே ஒரு குள்ள நரியால் ஏமாற்றப்பட்டு வாட நேருகின்றது பிறரை எச்சரிக்கப் புத்தி தோன்றியதும் தன் விஷயத்தில் அது மந்தமாகிவிடுகிறது.

போலிருந்து விட்டார்கள். வாஸு வந்த பிறகு இதை யறிந்து கண்டிக்க வாரம்பித்தான். "ஐயா! எஜமானுக்கு இவைகளைக் கணக்கு ஒப்புவிப்பவன் நானல்லவோ! இவைகளை நீ எடுத்துக் கொண்டு விட்டால் நான் எப்படி பதில் கூறுவது? இந்த வழக்கத்தை விட்டு விடு" என்று கூறினன்.

இதைக் கேட்ட அந்த குமாஸ்தா ஏளனமாக நகைத்துக் கொண்டே வாஸுவை விரைக்க விரைக்கப் பார்த்தான். அலக்ஷியமாக உதட்டைப் பிதுக்கினன். "பேசாதே! வாயை மூடய்யா! என்ன அளக்கின்றாய்? உன் பெரியதனத்தின் கீழ்—ஆதிக்கத்தின் கீழ்— இங்கு ஒன்றுமில்லை. செட்டியாரே நானு; நானே செட்டியார். இந்த விவரம் தெரியாது வீணுக உடம்பை அலட்டிக்கொண்டு உளறுதே! நீ ஜாக்ரதையாகப் பிழைக்க வேண்டுமாயின் என்னோடு ஒத்துழை. இல்லையேல் பின்னுல் வருவதைக் கூற முடியாது." என்று கர்வத்துடன் கூறினன்.

இதைக் கேட்டும், இவன் செய்கையைப் பார்த்தும் வாஸுவுக்கு நிரம்ப மனக் கசப்பும் வெறுப்பும், ஆத்திரமும் உண்டாகி விட்டன. தன் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, "ஐயா! உம்முடன் வீண் வம்பு பேசி வாதம் செய்வதற்கு நான் பாத்திரமல்ல. எது நியாயம். எது சத்தியம். என்ற மார்க்கத்தில் நான் நடப்பவனே யல்லாது அனியாயத்தைச் செய்ய நான் ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன். செட்டியாரும் நீரும் ஒன்ருயின் இருக்கட்டும். அதைப் பற்றி எனக்கென்ன வந்தது? இந்த திருட்டுக் காரியம் செய்ய வேண்டாம். செட்டியாருக்குத் தெரிந்து அவர் எதிரில் செய்யுங்கள்." என்ருன்.

சிலர் தாம் செய்த சங்கீதக் கச்சேரியைப்பற்றிப் பலரிடம் பல மாதிரியாகக் கூறிவிடுகிருர்கள். அக் கச்சேரியை நேரில் கேட்டவர்களும் பாடியவர்களின் வாய்ப்பறையைக் கேட்டவர்களும் ஒன்ருகச் சந்திக்க நேர்ந்த காலையில் வண்டவாளம் வெளியாகிவிடுகிறது. வீண் ஜம்பத்தின் பலன் இது.

இதைக் கேட்டவுடன் கோதண்டத்திற்கு வந்து விட்டது கோபம். "அடேய்! திருட்டு வேலை என்று சொல்கிறாய். ஆஹ்ஹா! உனக்கு ஒன்றும் நிதானம் தெரியாமல் பேசுகிறாயா! யாருடா திருட்டு வேலை செய்கிறார்கள். நீ செய்யும் திருட்டெல்லாம் ஒருவரும் அறியவில்லை என்று எண்ணினாயா? அடேய் படவாப் பயலே! உன் திருட்டைக் கண்டு பிடிப்பதற்காகத்தான் நான் இம்மாதிரி கூறினேன். இரு; இரு. இம்மட்டுடன் முடிந்து விட்டதாக நினைக்காதே! உன் வண்டவாளத்தை வெளியிடுகிறேன். இத்தனை பதட்டமா உனக்கு?" என்று வெகு ஆத்திரத்துடன் கூறிக்கொண்டே நிற்காமல் போய் விட்டான்.

இச் செய்கையும், சொற்களும் அம்புபோல வாஸுதேவனின் மனத்தில் சுறுக்கென்று பொத்தியது. "அட துராத்மாவே! உன்னுடன் நானும் துஷ்ட காரியத்திற்கு உடந்தையாக விருந்தால் நல்லவன். இல்லையேல் என் தலைமீதே பழியை சுமத்தப் பார்க்கிறாயா! அனியாயக்காரப் பாவீ! உலகத்தில் அக்ரமத்திற்குத்தான் என்றும் ஜெயம் என்று நினைக்காதே! அக்ரமம் அழிந்தே போகும். நியாயத்திற்குத்தான் ஜெயம் வரும். இந்த சத்ய வாக்கை யாராலும் அசைக்க முடியாது." என்று தனக்குள் முணு முணுத்துக் கொண்டே தன் வேலையைக் கவனித்தான். அவன் சொல்லிய வார்த்தைகளே மனத்தில் உறுத்திக் கொண்டிருந்தன. "சீச்சீ! இந்த அல்ப நாய் பேசி விட்டதால் நமக்கு என்ன வந்து விட்டது? கடவுளுக்குப் பொதுவாக நாம் நடந்து கொள்வதுதானே நமக்குக் கடமை. இருக்கட்டும். இந்தப் பயல் என்னை என்ன செய்ய முடியும்?" என்று தன்னையே தான் தேற்றிக் கொண்டான்.

தன் மனக் கவலை தீர சங்கீதமாவது கேட்போம் என்று உத்தமரின் தோட்டத்திற்குச் சென்றான். அங்கு வழக்கம்போல

டாக்டர்களில் சிலருடைய தடபுடலைப் பார்க்கும்போதே அவர் சென்ற உயிரையும் திருப்பிவிடும் வல்லமை பெற்றவர் என்று பிரமிக்கச் செய்கிறது. சிலரோ கைதேர்ந்த பக்காப் பேர்வழியாக விருப்பினும், வெகு சாந்தமாயும் அடக்கமாயும் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்த

ஆநந்தமான கானும்ருதம் பொழிந்து கொண்டே இருந்தது. "அண்ட சரா சரத்தையும்" என்ற திவ்ய பாடல் வெகு மாதுரிய மாய் கேட்கக் கேட்க வாஸுதேவன் தான் ஒரு வீதியில் சுவரோடு ஒட்டிக்கொண்டு நிற்பதையும் மறந்து போய் மெய்ம்மறந்து நின்று விட்டான்.

உத்தமர் ப்ரதி தினமும் தன் காரியாலயத்திலிருந்து வீட்டிற்கு வந்த வுடன் அவருடைய ப்ரம்மாண்டமான தோட்டத்தில் பரிமளம் நிறைந்த புஷ்பச் செடிகளுள்ள பாகத்தில் இருக்கும் வஸந்த மாளிகையில் அமர்ந்துதான் ஆகாரம் சாப்பிடுவார். தன் னருமைப் புதல்வியைப் பாடச்செய்து நிம்மதியாக ஆநந்தமாய்க் கேட்பார்.

அன்றும் அவள் வழக்கம்போலப் பாடினாள். உத்தமர் வழக்கத்திற்கு மாருக ஏதோ ஒரு விதமான கவலையுற்று வீற்றிருந்ததை இன்பமணியும் ரங்கமணியும் கண்டார்கள். இதன்காரணம் அவர்களுக்கே தெரியவில்லை. தன்னுயிருக்குயிரான பிதாவின் முக வாட்டத்தை யறியவே மணியின் மனம் பறக்கின்றது. ஆகையினால் பாடுவதற்கு உத்ஸாகமில்லை. உத்தமர் தினம் "அதைப் பாடு. இதைப் பாடு." என்று தனக்குப் பிரியமானவற்றைக் கூறுவார். அன்று மவுனமாகவே இருந்ததைக் காண இவர்களின் மனத்தில் வேதனை அதிகரித்தது.

இன்பமணி பாடுவதை நிறுத்திவிட்டு உத்தமரிடம் சென்று "அப்பா! இன்று தங்கள் முகம் ஏதோ வாட்டமாக விருக்கிறது; இதன் காரணம் யாதோ தெரியவில்லை. எனக்குப் பாடுவதற்கே மனம் வரவில்லை. என்ன விஷயம்? அதை நான் தெரிந்துகொள்ள லாமா! அம்மாவுக்கும் மிக்க விசனமாக விருக்கிறது." என்று நிரம்பவும் வணக்கத்துடன் கேட்டாள்.

சிலரோ 'ஆமாம், இதைப் பார்த்தாலே துணி முடிந்ததுபோல விருக்கிறது; இதற்கென்ன தெரியும்? வேறு வைத்தியனைக் கூப்பிடுங்கள்" என்கிருர்கள். படாடோபத்திற்கன்றே மதிப்பு!

இதை கேட்ட உத்தமர் "மணி! ஒன்றுமில்லை. இப்போது என்னை தொந்தரவு செய்யாதே! கவலைக்கிடமான விஷயங்கள் இருப்பதென்னவோ நிஜமே. பிறகு தெரிவிக்கிறேன். இன்னும் சிறிது நேரம் நீ பாடு'' என்றார். அதற்குமேல் அவள் ஏதும் பேசாமல் மீண்டும் பாடத் துவக்கினாள். உத்தமர் எதையோ நினைத்துக் கொண்டவர்போல எழுந்து, "மணி! நான் வெளியில் சென்று வருகிறேன். நீங்கள் இங்கேயே இருங்கள். ஒருகால் நேரமானாலும் பயப்படவேண்டாம். எங்கும் ஆளை யனுப்ப வேண்டாம்'' என்று கண்டிதமான உத்திரவைப் போட்டு விட்டு வெளியில் சென்று விட்டார்.

ஒரு நாளும் கண்டறியாத புதிய மாறுதலுடன் செய்த இச் செய்கையால் தாயும் மகளும் தடுமாறினார்கள். ஒன்றுமே தோன்ருது "என்ன விஷயமாக விருக்கும்?'' என்று குழம்பிப்போய் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டே நின்றார்கள். "மணி! அப்பாவுக்கு திடீரென்று கவலை கொள்ள என்ன சம்பவம் நேர்ந்திருக்கும்?'' என்றாள் ரங்கமணி. "ஒன்றும் புரியவில்லையே!'' என்றாள் இன்பமணி. இப்படியே விஷய மறியாது தவித்தவாறு ரங்கமணி வீட்டுக்குள் சென்றாள்.

இன்பமணிக்கு மனத்தில் தாங்கக்கூடாத அபாரமான கவலை குடிகொண்டுவிட்டது. ஏற்கெனவே அவருக்கு எதிரிகள் இருப்பது தனக்குத் தெரிந்த விஷயமாதலால் அவர்களால் ஏதேனும் துன்பம் நேர்ந்திருக்குமோ என்று எண்ணினாள். "ஐயோ! பரம தயாள மூர்த்திக்கு ஒப்பான என் பிதாவின் உள்ளம் கலங்கி முகம் வாடும்படியான காரணம் என்ன வந்துவிட்டதோ தெரியவில்லையே! ஒரு வேளை ஆகாரத்திற்கு விதியின்றி தெருவில் திரிந்த ஏழை என்னைக் கருணையுடன் கொண்டுவந்து தம்மகளுக்கு மேலான பதவியில் வைத்து ரக்ஷிக்கும் ப்ரபுவின் இடர் என்னதென்று தெரிந்து கொண்டு அதை நிவர்த்திக்க என்னால் முடியுமா! நான் அந்த காரி

தாயாருக்குத் தெரியாமல் மனைவிக்கும், மனைவிக்குத் தெரியாமல் தாயாருக்கும் பழங்கள் வாங்கிக் கொடுத்துத் தான் இருவரிடத்திலும் நல்லவனாகிறான். தாயார் தனக்குக் கொடுத்ததையும். மனைவி தனக்குக்

யத்தைச் செய்யக் கடமை பட்டவளல்லவா? அதைச்செய்யாவிடின் என் மனம் எவ்வாறு நிம்மதி யடையும். என் கடனைச் செய்யாத பாதகி என்றல்லவோ என் மனம் எண்ணும். என்ன செய்வது?'' என்று கலக்கமடைந்து பலவிதமான எண்ணங்களுடன் வீற்றிருந்தாள்.

வெளியில் தன் விசனம் தீரும்பொருட்டு கானம்ருதத்தைப் பருக நின்றுகொண்டிருக்கும் வாஸுதேவனுக்கு அன்று சங்கீதம் முதலில் ஒன்றிரண்டு கேட்டபிறகு திடீரென்று நின்றுவிட்டதால் மீண்டும் கானமழை பெய்யும் பெய்யும் என்று மழைத் துளிக்குக் காத்திருக்கும் சாதக பக்ஷியைப்போல காத்திருந்தான். 5. 10.. 15... நிமிஷங்கள் கடந்து அரை மணியும் ஆகிவிட்டது. "சரி இன்று நமக்கு இக்கலக்கத்துடன் இருப்பதுதான் ப்ராப்தம்போலும்.'' என்று எண்ணி புறப்படக் கிளம்பினான்.

அச்சமயம் 7–8-வயது மதிக்கக்கூடிய 5–6–குழந்தைகள் அழுதுகொண்டே அந்த பக்கம் வந்து நின்று தோட்டத்திலுள்ள மரத்தை உற்று உற்றுக் கவனித்தன. அங்கேயே நின்றுகொண்டிருந்த வாஸு இக் குழந்தைகள் பறக்க விட்டுக்கொண்டிருந்த காத்தாடி அம் மரத்தில் மாட்டிக்கொண்டு விட்டது. அதை எடுக்க மாட்டாது அழுகிறார்கள் என்று தெரிந்துகொண்டான். உடனே குழந்தைகளை நோக்கி "ஏண்டாப்பா அழுகிறீர்கள்?'' என்றான்.

பையன் :—எங்க பக்கத்துவூட்டுப் பையன் கிட்டேந்து காத்தாடி இரவல் வாங்கிண்டு வந்தேன். அது அதோ அந்த மரத்தில் மாண்டிண்டுடுத்து. அவன் அடிப்பானே என்று அழறேன். வீட்டுக்குப் போனா அம்மாவும் அடிப்பா. என்ன சேவேன்?'' என்று பின்னும் அழுதான்.

உடனே வாஸு இவர்களை நோக்கி "குழந்தைகளா! அழ வேண்டாம். இங்கேயே நில்லுங்கள். நான் எடுத்துத் தருகிறேன்.''

கொடுத்ததையும் பெருமையோடு பிறரிடம் ஜம்பமாய்க் கூறிக்கொள்ள, அப்போது ரகஸியம் வெளியாகிப் பெருத்த சண்டையாகிவிடுகிறது. இது அநேக குடும்பத்தின் கண் காட்சி போலும்.

என்று கூறி அந்த பக்கத்திலுள்ள மற்றொரு கேட்டின் வழியாக காவல்காரன் உத்திரவு பெற்று உள்ளே சென்றான்.

வஸந்த மண்டபத்திலுள்ள ஊஞ்சலில் வன தேவதையோ அன்றி இவ் வையகத்தையே ஆட்டி வைக்க வந்தமோகினி ரூபமோ?'' என்று வியக்கும்படியாக மணி கவலை முகத்துடன் உட்கார்ந்திருக்கும் திருக் கோலத்தைக் கண்டான். அவனை யறியாத ஓர் மின்சார சக்தியால் தாக்கப்பட்டவன் போல அசைவற்று நின்றான். அடுத்த வினாடியே காத்தாடியின் நினைவு வந்ததும் சடக்கென்று அம் மரத்தின் பக்கம் சென்றான். மரத்தின்மீது ஏறி காத்தாடியை எடுத்துக் கொண்டு குதித்தான். பதும மலர் மங்கையின் அழகை யொத்த இந் நங்கை நல்லாளை மற்றொரு முறை நோக்கினான்.

“ஆகா! இம்மாதரசியை நேருக்கு நேராகக் காண்பது இது மூன்றாம் முறையல்லவோ? ஒவ்வொரு தரமும் ஒவ்வொரு புதிய அழகுடன் ஜொலிக்கின்றாள். இவளன்றோ அன்று பொருளைக் களவாட வந்தது போல வந்து கைக்கு அகப்படாத பொருளாகிய என் னுள்ளத்தையே களவாடிக் கொண்டு போய்விட்ட மாயாவிலாசினி. மந்தகாஸ வதனி. என்ன எண்ணம்? என்ன குருட்டு யோசனை. மனத்தால் நினைப்பதற்கும் அரியதான பொருளைப்பற்றி சிந்திப்பதா! மடமை! மடமை!'' என்று எண்ணியவாறு திரும்பப் போனான்.

அவ்வமயம் அகஸ்மாத்தாக இப் பக்கம் திரும்பிய இன்ப மணியின் திருஷ்டியில் வாஸுதேவன் இங்கிருந்து செல்ல எத்தனிப்பது பட்ட உடனே அவள் திடுக்கிட்டாள். “ஹா! இவர் எதற்காக இங்கு வந்துவிட்டுத் திரும்பிப் போகிறார்? அப்பாவைத் தேடிக் கொண்டு வந்தாரோ? அப்பாவுக்கு மிகவும் பிரியமான இவர் வந்து செல்வதானது அப்பாவைத் தேடிக்கொண்டு வந்து இங்கு காணாததால்தான் செல்கிறாரென்று தோன்றுகிறது. ஏன் அவரை விசாரிக்க

தான் மற்றொருத்தியை ரகஸியத்தில் வைத்திருப்பதை உலகமே அறியாதென்று அவன் நினைத்திருக்கிறான். அந்த வைப்பு ஸ்திரீயோ தான் இன்னாரை அடைந்திருப்பதாகக் கூறிக்கொண்டால் பெருத்த

வில்லை என்று அப்பா சொல்வாரே! நாம்தான் சென்று விசாரிப்போம்'' என்று எண்ணி ஆடும் மயிலோ! அன்னப்பேடோ என்று ஐயுறும்படியாக இன்பமணி எழுந்து விரைவில் இவ்விடம் வந்து "ஐயா! என்று குயிலினுமினிய குரலால் அழைத்தாள்.

திரும்பி நான்கடி நடந்துவிட்ட வாஸுதேவன் கனவிலும் நினையாதவாறு தன்னை யழைக்கும் யாழினுமினிய தொனியைக் கேட்டு தடை கட்டிய நாகம் போலத் திரும்பி நின்றான். இன்பமணியை நோக்கினான். மறு விநாடி இயற்கையின் விகாரத்தினால் இருவர் தலைகளும் கவிழ்ந்தன. சில விநாடிகள் மவுனப் பதுமை போலானார்கள். அடுத்த நிமிடம் வாஸு மிக்க மரியாதையோடு "தாயே! என்னையா கூப்பிட்டீர்கள்?'' என்றான்.

மணி:—(தலைகுனிந்த வண்ணம்) ஆம்: தங்களைத்தான் கூப்பிட்டேன். தாங்கள் இவ்விடம் விட்டுச் செல்கையில்தான் நான் கண்டேன். ஒருகால் அப்பாவைத் தேடிக்கொண்டு வந்து அவரில்லாமையினால் செல்கிறீர்களோ வென்றெண்ணிக் கூப்பிட்டேன். பிறகு பிதா வந்தால் ஏன் அவரை விசாரிக்கவில்லை என்று கோபிப்பார். அதற்காக அழைத்தேன். அப்பா வெளியில் போயிருக்கிறார். ஏன் என்ன சமாச்சாரம்.?

வாஸு:—அம்மணீ! காத்தாடி இம் மரத்தில் மாட்டிக் கொண்டதால் அதோ! அக் குழந்தைகள் அழுகிறார்கள். அதை அவர்களுக்கு! எடுத்துக் கொடுக்கும் பொருட்டு வந்தேன். மற்றபடி ஒன்றுமில்லை.—என்று கூறுவதற்குள் காத்தாடியுடன் நிற்கும் இவனைக் கண்ட அப் பிள்ளைகள் ஓடோடி வந்து காத்தாடியை வாங்கிக் கொண்டு ஒரு குதி குதித்துச் சந்தோஷத்துடன் ஓடி விட்டார்கள். குழந்தைகளுக்கு வேண்டியது அவ்வளவுதானல்லவா?

மணி:—ஓகோ! அப்படியா! தாங்கள் வந்தது தெரிந்தால் அப்பா ஏன் விசாரிக்கவில்லை என்று கோபிப்பார். வாருங்கள்.

கௌரவம் என்று எண்ணி முக்கியமான மனிதர்களிடம் கூறிவிட, அது அவனுக்குத் தெரிந்துவிட, பெருத்த சண்டையுடன் பிரிவும் உண்டாகின்றது. சிலருக்கு அவர்களின் ஜம்பமே சத்துருவாகின்றது.

உள்ளே அம்மா இருக்கிறார்கள். சற்று உட்கார்ந்து செல்லலாம் என்று நயமாகக் கூறினன்.

வாஸு:—அம்மணி! நேரமாகி விட்டது. சகல அம்சத்திலும் அபாத்திரனுகிய நான் அவர்களுடன் பேசுவதற்குத் தகுதி யற்றவ னன்றோ? எனக்கு இம் மாளிகையில் கால் வைக்கவும் யோக்யதை இல்லை என்பதை நான் கூறவேண்டுமா! நான் சென்று வருகிறேன். தாங்கள் பெரிய சோதனைக்காரர். தங்கள் எதிரில் நிற்கவும் பயமா யிருக்கிறது.

மணி:—பேஷ்! பேஷ்! இதுகூட காட்சிச் சாலையா! நான் களவாட வந்திருக்கிறேனு! அப்படிக்கொன்றும் பயப்பட வேண் டாம். இப்படி உட்காரலாமே!—என்றாள்.

வாஸுவுக்கோ மனம் குழம்பிப்போய் தத்தளிக்கின்றது. உட்காருவதற்கு பயம் ஒரு புறம் பாதிக்கிறது. லஜ்ஜையும் வதைக் கிறது. இருதயத்திலுள்ள மற்றொரு எண்ணமோ, மணியை விட்டு அப்புறம் அகல விரும்பவில்லை. இருதலைக் கொள்ளி எறும்பைப் போலாகி விட்டான். ஏற்கெனவே சில தினங்களாக மனத்திடையே பதிந்து கிடந்த ஓர் ரகஸியமான எண்ணம்—உணர்ச்சி—இவனை யறி யாது வெளிப்பட்டு ஓர் விதமான மாறுதலை உண்டாக்குகிறது. அவைகளை உள்ளடக்கிக்கொண்டு "அம்மணி! நான் என்ன பதில் கூறுவதென்று தெரியவில்லை. நான் தினம் நாடி வரும் பொருள் ஒன்றை இன்றும் நாடி வந்தேன். அது என்ன காரணத்தினுலோ எனக்குக் கிடைக்கவில்லை. அதனல் தத்தளித்து நின்றேன். இனி, விடை பெற்றுக் கொள்கிறேன்.'' என்று வணக்கமாகக் கூறினன்.

மணி:—என்ன! என்ன! தாங்கள் தினம் நாடிவரும் பொருளா! இந்த விடத்திலிருந்தா! அது என்ன பொருள்? ஏன் இன்று

மகா மேன்மையாயும் யோக்கியமாயும் ஒரு காலத்தில் குடும்பம் நடைபெற்றது மறைய, பின்னொரு காலத்தில் மகன் திருடனுகிச் சிறை செல்லவும், மகள் இதர மதத்தினருடன் ஓடிவிடவும், தாய்தந்தையர் கலங்கிச் சாகவும் ஆய்விடுகின்றது.

கிடைக்கவில்லை. இத்தனை நாட்களாகக் கிடைத்ததா! அப் பொருளைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

வாஸ:—தாயே! அது காட்டுவதற்கும், பார்ப்பதற்கும் வெளிப்பட்ட ஸ்தூல பொருளல்ல. ஆத்மார்த்தகமாய்—சப்த ரூப மாய்—மனோகரமாக, மழைபோலப் பொழியும் அம்ருத தாரை அது. அதற்கு ரூபமில்லை எனினும் அரூபியாகவே ஆளைத் தன் வயப்படுத்தும் திறம் படைத்தது. அபார சக்தி வாய்ந்தது இகத் திற்கும் பரத்திற்கும் அரிய துணையானது. ஆநந்தத்திற்கு ஆஸ்பத மானது. ஆறாத துயரத்தை எல்லாம் ஆற்றும் ஆற்றல் படைத் தது. மெய்ம் மறந்து பரவசமாக்கக் கூடியது. அத்தகைய அரிய பொருள் இன்று எனக்குக் கிட்டவில்லை. நான் வருகிறேன்

மணி:—ஓகோ! ஏதோ வேறு விஷயம் கூறப்போவதாக எண் ணினேன். இப்போதறிந்தேன். உபயோகமற்ற வஸ்துவைப்பற்றி யார் சிலாகித்துப் பேசுகின்றார்களோ அதில் இரண்டு கருத்துக்கள் கட்டாயம் இருக்கின்றன. ஒன்று அபாரமான அபிமானத்தினால் எது எப்படி இருப்பினும் வெகு நன்றாயிருப்பதாகக் கூறுவார்கள். மற்றொன்றோ! தனக்கு அவர்களால் நடக்க வேண்டிய காரியத்தை முடித்துக் கொள்ளும் பொருட்டு ஆகாயத்தில் தூக்கி வைத்துப் பேசித் தன் சுயநலத்தைச் சாதித்துக் கொள்வார்கள்" என்று கூறி முடிப்பதற்குள்.

வாஸ:—தாயே! தாங்கள் அப்படி நினைக்கக்கூடாது. நான் அம்மாதிரியான வழிகளில் எதிலும் பேசவில்லை. ஒவ்வொரு வருக்கும் ஆத்மாவென்பதும், மனம் என்பதும் உண்டல்லவா! அதில் சுத்தமான எண்ணமும் சத்தியமான நினைவும் பரிசுத்தமான போக்கும் இருப்பது இயல்பேயன்றோ! அதே இயல்புடன் என்

விபரீத எண்ணத்துடன் சிலர் சிநேகம் செய்ய வருவதும், நெருங் கிய பிறகு சிறுகச் சிறுகப் புத்தக இரவல், சாமான்களிரவல், நகைகள் இரவல் கேட்டுப் பெற்று அந்தக் கடைசி லாபத்துடன் ஆள் ஓட்டமும் மறைவும் காட்டி விடுகிறார்கள். முதலிலேயே மனுஷ்யர்களின் குணம் அறியாது மோசம் போவதில் இது ஒன்று.

ஆத்மார்த்தகமான ஆநந்தத்தினால் நான் கூறினேனே யல்லாது வீண் ஜம்பப் பேச்சன்று. அப்படி நினைக்கவேண்டாம்.

மணி:—இல்லை. கோபித்துக்கொள்ளக்கூடாது. உலகம் பல விதம். உலகத்தின் போக்கையும்—மனிதர்களின் சுபாவத்தையும் நான் என் பிதாவின் மூலம் பார்த்திருப்பதால் அதைக் கூறினேனே யல்லாது தங்களை யப்படி என்று சொல்லவில்லை......தாங்கள் இப்போது ஆசிரமத்து வேலையில் இல்லைபோலிருக்கிறதே! வேறு அமர்ந்துள்ள வேலை சரியாகத் திருப்தியாக விருக்கிறதா!

வாஸு:—அம்மணி! ஆசிரமத்து வேலையைப்போன்று திருப்திகாமாக விருக்கக்கூடிய வேலை இனி கிடைப்பது அரிதிலும் அரிது. அதற்கு நான் பாக்யம் செய்யாப்பாவியானேன். ஏதோ உலகத்தில் ஜீவனுடன் உள்ள மட்டும் நாம் நன்மார்க்கத்தினின்றும், சத்தியத்தினின்றும் வழுவாது எத் தொழிலாயினும் பரிசுத்தமாகச் செய்து வயிறு வளர்க்க வேண்டும். இதல்லாது அனியாய மார்க்கத்தில் பணந் தேடி வாழ்வதைக் கேவலம் பிணத்திற்குச் சமமாக எண்ண வேண்டும் என்பதே என்னுடைய நோக்கம். ஆதலால் கடவுள் காட்டியுள்ள மார்க்கத்தில் என் மனச் சாட்சிக்கு விரோதமின்றி கடவுளுக்குப் பொதுவாக நான் காலத்தைக் கடத்திக் கொண்டு வருகிறேன். அன்று ஆசிரமத்தில் நடந்த திருட்டோடு என் பிழைப்பும் திருடன் பிழைப்பாகவே ஆய் விட்டது......

மணி:—ஓகோ! திருடன் பிழைப்பென்றால் எப்போதும் போலீஸ்காரர்களிடம் பயந்து ஒளிந்தல்லவோ நடப்பார்கள். அப்படி தங்களுக்கென்ன பயம்?—என்று கூறி ஒரு முறை அவனைப் பார்த்தாள்.

வாஸு:—தாயே! போலீஸ்காரர்களாகிய ஒரு வர்க்கத்தினரிடம் மட்டும் அவர்கள் பயந்து நடக்கவேண்டும். நானோ கண்

சனாதனக் கொடி கட்டிப் பறக்கும் சிலரின் வீட்டில் விவாகமாகாத பெண்கள் 20 வயதிற்குக் குறையாமல் இரண்டு மூன்று பேர்களை வைத்திருப்பது எந்த சனாதன அநாதி சாஸ்திரத்தில் எழுதி இருக்கிறதோ தெரியவில்லை.

னுக்குத் தெரியாத—கருத்திலும் காணுத—பல வஸ்துக்களிட மெல்லாம் பயந்து ஒளிந்து ஒளிந்து நடக்கிறேன். தாயே! நான் சென்று வருகிறேன்; நேரமாகி விட்டது.

மணி:—ஐயா! மேற் குறித்த வீண் சம்பாஷணைக ளெல்லாம் ஒருவாறு இருக்கட்டும். முக்கியமான விஷயம் ஒன்று இருக்கிறது. தங்களைப் பார்க்க சந்தர்ப்பம் எவ்விதம் கிடைக்கும் என்று எதிர் பார்த்திருந்தேன். கடவுளாக சந்திக்க வைத்தார். மனத்தில் சஞ் சலப்படாமல் விசனிக்காமல் இதோ இக் கடிதத்தைப் படித்துப் பாருங்கள். பிறகு கூறுகிறேன்.'' என்று கூறி ஒரு கடிதத்தைக் கொடுத்தாள்.

திடுக்கிட்ட வாஸு கடிதத்தை வாங்கி உள்ளுக்குள் கலக்கத் துடன் படிக்கத் தொடங்கினுன்.

"ஐயா!

தாங்களென்னவோ பரம காருண்ய மூர்த்தியாயும் தியா கத்திற்கே ஓர் த்வஜமாயும் (கொடியாயும்) விளங்குகிறீர்கள், ஆதலால் அல்ப விஷயத்தில தங்கள் நாட்டம் செல்லாதென் பது தெரிந்த விஷயமே: ஆயினும் எந்த விஷயத்தை அல்ப மாயும் உபயோக மற்றதாயும் நினைக்கின்ருேமோ அதே விஷ யத்தில்தான் அபாரமான முக்கிய காரியம் குவிந்து கிடக்கும். இது உலகானுபவம். ஆதலால் இதை முக்கியமாகக் கவனிக்க வும். சென்ற சில தினங்களாக ப்ரதி தினமும் மாலை வேளை யில் குடிகாரன்போலும், கள்ளன் போலும் மதிக்கக்கூடிய ஓர் மனிதன் தங்கள் பங்களாவின் தென்னண்டை வாசல் பக்க மாக நின்று எதையோ வெகு கூர்மையாகக் கவனிக்கின்ருன். அவனைப் பார்த்தால் ஏதோ பெரிய ஆழ்ந்த கருத்தைக்

விவாகம் முதலிய விசேஷங்களுக்குப் பிறர் கொடுக்கும் பரிசுப் பொருள்கள் விலை பெற்றவைதானு என்று கணக்கு பார்ப்பவர்களுக்கு, தாங்கள் பிறருக்குச் செய்யும்போது இக்கணக்கு மறந்துவிடுகின்றது. "எல்லாம் போதும்; இரண்டு ரூபாயில் செய்து விடலாமா?'' என்ற சொல் தாராளமாக வந்துவிடுகிறது.

கொண்டு விஷமத்தனமாகவே நிற்பதாக தெட்டெனத் தெரிகி றது. அவன் உங்கள் மூவரில் ஒருவருக்கோ, அன்றி மூவருக்குமோ கட்டாயம் தீங்கிழைக்கவே அவ்வாறு செய் கிறான். எதையும் தர்மம் தர்மம் என்று எண்ணிப் பேசாம லிருந்து விடவேண்டாம். பாம்பு கடிப்பதற்கு முன்னால் பாம்பு வராதபடியும், கடிக்காதபடியும் பார்த்துக்கொள்ள வேண்டும். பாம்பு வந்துவிட்ட பிறகோ அதை அடித்துக் கொல்ல வேண்டும். இந்த விஷயம் தமக்குத் தெரியாததன்று. ஆதலால் இதைக் கவனித்து அவனைப் பிடித்து தண்டியுங்கள். உங்க ளிடம் உண்மை யன்புள்ள ஊழியனானதால் இதைத் தெரிவிக் கிறேன். உஷார்.

இங்ஙனம்

ஊழியன்''

இதைப் படித்த உடனே வாஸுதேவனின் சரீரமே நடுக்க முற்றது. "என்ன அனியாயம் இது!" என்று கதி கலங்கினான். "அம் மணீ! இதென்ன விபரீதமாக விருக்கிறதே. இதை யார் எழுதி னார்கள்? இதைத் தங்கள் பிதா பார்த்து என்ன கூறினார்கள்? ஒன் றையும் ஒளிக்காமல் கூறவேண்டும். என் மனம் பதைக்கிறது." என்று வெகு பதைப்புடன் கேட்டான்.

மணி:—இப்படி அமருங்கள். ஐயா! ஒரே பொருளை—விஷ யத்தை—இருவர் நாடுவதாயின்—திருடுவதாயின்—அத் திருட்டும் அவ் விஷயமும் இருவரின் மனத்திற்கும் நன்றாகத் தெரிந்ததே யாகும். ஆதலால் இனி அதைப் பற்றி விஸ்தரித்துக் கூற அவசிய மில்லை. திருட்டுப்போன பொருளும் விஷயமும் இருவரையும் பாதித்ததே யாகும். இதன் கருத்தைத் தாமே தெரிந்து கொள்ள லாம்......நிற்க, என் பிதா நிலவரி விஷயமாயும், இதர சம்பந்த மாயும் அடிக்கடி வெளியூருக்குப் போவார். அதேமாதிரி சில தினங் களுக்கு முன்பு ஒரு கிராமத்திற்குச் சென்றிருக்கையில் ஒருவன்

மகாத்மா காந்தியை நேரில் கண்டேன்; பேசினேன். கதர் மாலை யைப் போட்டேன் என்று சிலர் மூட்டையை யடுக்குகிறார்கள். இதை அநேக பாமரர்கள் உண்மை என்றே எண்ணுகிறார்கள். காந்தியுடன் கூட

இக் கடிதத்தை என் பிதாவிடம் கொடுக்கும்படியாக வேலையாளிடம் கொடுத்துச் சென்றானும். அதை மேஜைமீது வைத்துவிட்டான். என் பிதாவின் உத்திரவு எனக்கு எப்படி யெனில் அவருக்கு வரக் கூடிய கடிதங்களில் ஆபீஸ் கடிதங்களைத் தவிர மற்றதை நான் உடைத்துப் பார்க்கவும் அது பொதுதர்ம விஷயமோ! எங்களுடைய தர்ம ஸ்தாபன விஷயமோ! கிராமாந்திர விஷயமோ! அல்லது அழைப் புப் பத்திரங்களோ! முதலியவைகளாக விருப்பின் அவைகளுக்கு சமயத்திற்குத் தக்கபடி 'அப்பா ஊரிலிருக்கிறார்; இல்லை.' முதலிய பதிலை நானே எழுதி விடும்படி எனக்குக் கூறியிருக்கிறார்.

அதுபோல இக் கடிதத்தையும் நான் உடைத்துப் படித்தேன். எனக்கே மன அதிர்ச்சியும், திடுக்கிடலும் உண்டாயின. ஏனெனில் திருடன காரியத்தைத் திருடனே அறிவது சகஜமல்லவா! ஆசிரமத் தில் களவாடும்படியான வேலையை என் பிதா எனக் களிப்பதற்கு முன்னமேயே நான் என் தாயாருடனும் தந்தையுடனும் ஆசிர மத்தை வாங்கும் பொருட்டு வந்துள்ள சில தடவைகளில் தங்களை தரிசித்திருக்கிறேன். ஆனால் தாங்கள் என்னைப் பார்க்கவில்லை. திருட்டு விஷயத்திலிருந்துதான் தாங்கள் என்னைக் கவனித்தீர்கள். பிறகு நடந்த சம்பவங்களுக்கு அப்புறம் ஒருவருக்கொருவர் திருடர் களே ஆகிவிட்டதைக் கூறவேண்டுமா?

காற்று கூடச் செல்ல முடியாமலிருந்த பெருங் கோட்டைக் குள் மாபெருங் காற்றும் எண்ணமும் புகுந்து அலைக்கச் செய்யத் தொடங்கிவிட்டன. அதுமுதல் நான் கபடியாகிவிட்டேன். என் பெற்றாரும் அறியாத ஓர் கள்ளத்தனத்தை மனத்தில் கொண்டவ ளானதும் என்னிலைமையே மாறுபட்டது. என் பிதாவிடம் தாங்கள் அன்று சம்பாஷிக்கையில் என்னுருவப் படத்தைத் தாங்கள் கண்டு பித்தன் போல நின்றதையும் அறிந்தேன்.

பிறகு தாங்கள் இம் மதிலோரத்தில் நின்று சங்கீதங் கேட் பதை நானே சில தினங்களில் நேரில் கண்டு வியப்பும், திகைப்பும்

இருந்தவர்களைக் கேட்ட பிறகோ மேற்குறித்த பொய் மூட்டை வெளி யாகி விடுகிறது. அவர்கள் காந்தியைச் சரியாகத் தரிசிக்கக்கூடயில்லை என்று அறிய நேர்கிறது. இது ஒரு கௌரவமா ?

அடைந்தேன். எனினும் நான் வேறு என்ன சொல்லக்கூடும்? செய்யக்கூடும். இதோ இவ் வாசனத்தின் மீது நின்று பார்த்தால் அங்கு நிற்குமிடம் நன்றாகத் தெரிகிறது பாருங்கள். அப்படியே சில தினங்கள் யாருமறியாது பார்த்தேன். எனக்கு விஷயம் விளங்கி விட்டது.

இக் கடிதத்தைப் பார்த்தவுடனே நன்றாகத் தெரிந்துகொண்டேன். இக் கடிதத்தை அப்பா பார்ப்பது கூடாது; பார்த்தால் என்ன நினைப்பாரோ; என்ன விதமாகத் தோன்றிவிடுமோ; எப்படி காரியம் முடிந்துவிடுமோ; என்கிற பெருங் கவலையும் கலவரமும் உண்டாயின. உடனே இதைக் கிழித்துவிட எண்ணினேன். ஆனால் அப்படிச் செய்யாமல் வைத்திருந்தால் பின்னொரு சமயம் உதவும் என்று தோன்றியது. ஆதலால் ஜாக்கிரதையாக வைத்துக் கொண்டேன். சத்தியமே உருக்கொண்ட என் பிதாவிடம் நான் உண்மையை ஒளித்து அசத்யமாக நடக்க நேர்ந்துவிட்டது. இக் கடிதத்தை வேண்டுமென்றே க்ஷாத்திரத்திற்கு யாரோ வித்யாசமாக எழுதி யிருக்கிறார்கள் என்பது நன்றாக விளங்குகிறது. இதனால் தங்களுக்கு ஒருவிதமான தீங்கும் நேராதிருக்க வேண்டுமே என்றுதான் நான் கவலைப் பட்டுக்கொண்டிருந்தேன். எப்படியாவது தங்களைக் கண்டு இவ் விஷயத்தை யறிவித்து அதற்குத் தக்கபடி நடந்துகொள்ளும்படிக் கூறுவதற்குப் பலகாலும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இன்றுதான் கடவுள் சமயத்தைக் காட்டினார். தாங்கள் விசனப்படவேண்டாம். அதனால் ஏதேனும் ஆபத்து விளையுமோ வென்று பயமாக விருக்கிறது." என்று கூறினாள்.

இதைக் கேட்ட வாஸுவுக்கு ஒருபுறம் அடக்க முடியாத ஆநந்தமும்—மற்றொரு புறம் பயமும், கவலையும் தோன்றி வதைத்தன. அன்பு நிறைந்த பார்வையுடன்—காதல் ததும்பும் பார்வையுடன்—இன்பமணியைப் பார்த்தான். வாய் திறந்து பேசமாட்டாது விநாடி காலம் தம்பித்து நின்றான். பிறகு "அம்மணி! தாங்கள் கூறியதெல்

விதியின் கொடுமையினால் விவாகம் தடைபட்டுவிட்ட காதலர்களின் கதியும், குற்றஞ் செய்யாது அநியாயப் பழியால் அந்தயானுக்கு அனுப்பப்பட்ட கைதிகளின் கதியும் ஒன்றாகவே இருக்கும்.

லாம் உண்மையா! ஹா! எனக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லையே: நான் ஓர் பெரிய குற்றம் செய்துவிட்டதை என் மனத்திடையே வைத்துக்கொண்டு தவித்துக் கொண்டிருந்தேன். என் குற்றத்தைக் கடவுள் மன்னிப்பாரா என்று இரவு பகலாக ஏங்கி நின்றேன். என்னை குற்றம் செய்யும்படி ஏன் ஏவினாய் என்று நொந்தேன். அந்த பரம்பொருள் ஷெ குற்றத்தை ஒருவர் மட்டும் செய்யாமல் இருவராகச் செய்யும்படியாய்க் கட்டளையிட்டு விட்டார் போலும்...அம்மணீ! நான் இன்று மனம் நொந்த புண்ணுடன் இங்கு வந்ததற்கு தினங் கிடக்கும் மதுரமான சங்கீதம் கிடைக்காது வருந்துகையில் நான் சொப்பனத்திலும் காண முடியாத—கேட்க முடியாத—ஓர் பெரிய மகிழ்ச்சியான—என் ஆவிக்கே அமுதம் போன்ற—விஷயத்தைக் கேட்டதானது என்னை பரவசமாக்குகிறது. அம்மணீ! நான் இப்போது ஓர் பைத்தியக்காரன் போலவிருக்கிறேன். தாங்கள் எவ்விதம் சொல்கிறீர்களோ அவ்விதம் நடக்கத் தயாராக விருக்கிறேன்.'' என்று கூறி மெய்ம்மறந்த தன்மையில் நின்றான்.

இதைக் கேட்ட மணி நாணமும் லஜ்ஜையும் கூடிய பார்வையுடன் பார்த்தபடியே "ஆம்! தாங்கள் சொல்வதுபோல நானும் ஓர் பைத்தியக்காரியாகவே இருக்கிறேன். இன்று எனக்கும் என் தந்தையின் விஷயமான கவலை அபாரமாகத் தோன்றி வதைத்துக் கொண்டிருந்தது. அது யாது விஷயமோ தெரியாது. அதனால் மன வருத்தப் பட்டுக்கொண்டிருக்கையில் கடவுள் தங்களை யனுப்பினார். "அடடா! நிரம்பவும் நேரமாகிவிட்டது. நாளைய தினம் தாங்கள் இங்கே வாருங்கள்; பேசிக்கொள்ளலாம். அக் கடிதத்தை இப்படி கொடுத்துவிடுங்கள்'' என்றாள். வாஸுவும் கடிதத்தைக் கொடுத்துவிட்டான். அம்மணீ! நான் சென்று வரட்டுமா! நாளை இதே சம

சில குள்ளநரிகள் நாத்திமார்களுக்கு இச்சகமாகத் தாம் நடப்பது; ஆனால் புருஷனிடம் சரியானபடி வத்தி வைத்து ஒரு பைசா அவர்களுக்குக் கொடுக்க விடாமலும், சரியானபடி பேச விடாமலும் செய்து விடுகிறார்கள். உள்ளுக்குள் நடக்கும் சுரங்கத்தை யறியாத நாத்தியோ அண்ணன்மீதே ஆயாசப்படுகிறாள்.

யத்திற்கு வருகிறேன்.'' என்று விடை பெற்றுக்கொண்டு பிரிய மன மின்றி அவ்விடம் விட்டுச் சென்றான்.

அவன் தலை மறையும் வரையில் அங்கேயே வைத்த விழியை வாங்காது நின்று பார்த்துக்கொண்டிருந்த மணி பிறகு பழயபடி வந்து உட்கார்ந்தாள். ஏற்கெனவே இருந்த கவலை ஒரு புறம் வருத்துவதோடு திடீரென்று உண்டான சந்திப்பின் ஆநந்தம் அவளைச் சூழ்ந்து கொண்டது. தன்னுடைய சொந்த விஷயமான இன்பத்தைவிடத் தன் பிதாவின் விஷயமான கவலையே இதைவிடச் சிறந்து தலை தூக்கி நின்றது. தன் பிதா சந்தோஷமாகவும் சுக ஜீவியாகவும் இருந்தாலல்லவோ தனது மனோரதம் நிறைவேறும். அவர் மனம் வருந்தியோ, கலங்கியோ இருப்பின் தனக்குச் சந்தோஷம் எப்படி உண்டாகும்? தன் பிதாவின் கவலையை எவ்வாறு அறிவது? என்று யோசித்தாள்.

திடீரென்று எதையோ எண்ணியவளாய் தன் பிதாவின் அறைக்குச் சென்றாள். அவர் மனத்தைக் கலக்கக்கூடிய கடிதங்கள் ஏதேனும் வந்திருக்குமோ வென்று அவருடைய அன்றைய கடிதங்களை எல்லாம் புரட்டிப் பார்த்தாள். ஒன்றிலும் ஒரு விஷயமும் தெரியவில்லை. அதன்மேல் என்ன செய்வாள். தன் தாயாரிடம் சென்றாள். ரங்கமணியும் இதே கவலையுடன் உட்கார்ந்திருந்தாள்.

மணி:—அம்மா! என்ன செய்கிறீர்கள்? அப்பாவின் கலவர விஷயம் யாதென்று ஒன்றும் தெரியவில்லையா? அப்பாவும் இன்னும் வரவில்லையே.

ரங்:—மணீ! வீண் கவலைப்படத்தான் நமக்குத் தெரியும். அப்பாவைக் கேட்டாலோ சரியாகச் சொல்லவும் மாட்டார். "கடவுளிருக்கிறார். அவரை நம்புங்கள். வீண் யோசனை எதற்கு?'' என்று

துஷ்ட காரியத்தைப் பிரத்யக்ஷமாகத் தன் மகன் செய்ததைத் தாயார் கண்டியாதது போக "என் மகன் ஒருபோதும் செய்யமாட்டான்; சத்தியமாகச் சொல்லுவேன்'' என்று கூறிச் சண்டை யிடுவதைப் பார்த்த மகன் திருந்துவதேது? இன்னும் துஷ்டத்தனம் செய்யத் தயாராகித் துணிந்து விடுகிறான்.

மூன்று மாதங்களில் கொடுக்கலாம்

நமது புது சந்தா நேயர்களில் பலர் நமது நூலாசிரியை எழுதிய எல்லா (21) நாவல்களையும் வாங்கிப் படிக்க ஆவலாக இருக்கிறதென்றும், ஆனால் ஒரே மொத்தமாகப் பணத்தைக் கொடுக்கக் கஷ்டமாயிருக்கிறதென்றும் சொல்வதால், அவர்களுடைய ஆவலைப் பூர்த்தி செய்யக் கருதி கீழ்க்கண்ட ஏற்பாடு செய்துள்ளோம்.

முதலில் ரூ. 12 முன்பணமனுப்பி, ரயில்வே ஸ்டேஷனின் பெயரைத் தெரிவித்தால் 21 புத்தகங்களையும் அனுப்பிவிடுகிறோம். மீதியுள்ள பத்து ரூபாயை மாதம் ரூ. 5 வீதம் இரண்டு மாதங்களில் அனுப்பலாம்.

இந்த ஏற்பாடு இந்தியாவிலுள்ளவர்களுக்கு மாத்திரம் தான் என்பதைக் கவனிக்கவும்.

வேண்டியவர்கள் உடனே முன் பணமனுப்புங்கள்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை.

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய நாவல்கள்.

	ரூ.	அ.		"ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை ரூ.	அ.
வைதேகி (2-பாகங்கள்)	2	8	...	2	0
பத்மசுந்தரன்	2	8	...	2	0
ராதாமணி	2	8	...	2	0
சாருலோசனா (2-பாகங்கள்)	2	8	...	2	0
காதலின் கனி	2	8	...	2	0
நவநீதகிருஷ்ணன்	2	0	...	1	12
ருக்மிணீகாந்தன்	2	0	...	1	12
சாமளநாதன்	2	0	...	1	12
சண்பக விஜயம்	1	12	...	1	8
கௌரீ முகுந்தன்	1	12	...	1	8
ஸாரமதி	1	12	...	1	8
சோதனையின் கொடுமை	1	8	...	1	4
பரிமளகேசவன்	1	4	...	1	0
உத்தமசீலன்	1	4	...	1	0
சுகந்தபுஷ்பம்	1	0	...	0	14
கதம்பமாலை	1	0	...	0	14
கோபாலரத்னம்	0	14	...	0	12
நளினசேகரன்	0	8	...	0	6
வீரவஸந்தா	0	8	...	0	6
மூன்று வைரங்கள்	0	8	...	0	6
படாடோபத்தின் பரிபவம்	0	8	...	0	6

நம்பி இருப்பது? பாதிராத்திரி யாகிவிட்டதே! ஈசா! என் செய்வோம்?'' என்று அபாரமான மனத் தாங்கலை யடைந்து இடிந்து போய், தத்தளிக்கும் பறவைபோல இருவரும் உட்கார்ந்து வழி பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் உள்ளத்துக் கவலையை உரைத்திடக் கூடுமோ! அனுபவித்தவர்களுக்கன்றோ தெரியும்.

12-வது அதிகாரம்

கொடிய விஷமம்—இடிமேல் இடி

வீதியில் குசு குசென்று கேட்ட குரலைக் கண்டு திண்ணைமேல் பதுங்கிய கோவிந்தனின் உள்ளம் கட்டு மீறிய துடிப்புடன் தத்தளித்து "ஹா! ஹா!'' என்ற பெரு மூச்சுடன் குழம்புகிறது. 'ஓலகாம்பாளை அப்படியே ஒரே வெட்டாக வீசிப்போட்டு விடலாமா!' என்கிற ஆத்திரம் கரை புரண்டு ஓடுகிறது. அதை யடக்கிக்கொண்டே விஷயங்களைக் கவனித்தான். அவர்களின் சம்பாஷணை கலைவுற்று எழுந்திருக்கப் போகும் ஜாடை தெரிந்து கோவிந்தன் சடக்கென்று இறங்கி வீதியில் சென்று அப்போதுதான் வருபவன்போல மீண்டும் வந்தான்.

அப்போதுதான் ஓலகாம்பாள் உள்ளிருந்து இருவருடன் பேசிக்கொண்டே வீதியில் வந்தாள். அப்போதுதான் வந்த கோவிந்தனைக் கண்டதும் எல்லோருக்கும் மனத்தில் ஒரு இடி இடித்தது. உடனே அனைத்த சமாளித்துக் கொண்டு "ஓகோ! இப்பதான் வராப்

சங்கீதக்காரர்களையும் ஆசிரியர்களையும் சிநேகம் செய்துகொள்ள அநேகரின் விருப்பம்; அதற்கே அலைகிறார்கள். அவ்வலைச்சல் எதற்கு? தாங்கள் இனும் புஸ்தகம் பெறுவதற்கும், தம் வீட்டுக் கலியாணத்தில் இலவசமாகப் பாடச் செய்வதற்கும்தான். சொந்த விஷயம் இல்லாவிடில் வருவது எது?

பலேயோ! அப்போதிலிருந்து காத்துக் கொண்டிருந்தோம். தாங்கள் வர நேரமாகுமோ என்னவோ வென்று அக்காவுடன் பேசிவிட்டுச் செல்கிறோம். சௌக்யந்தானே !'' என்றார்கள்.

ஓலகா:—ஆமாண்ணுக்கா! ஓங்களே பாக்கத்தான் காத்துக் கொண்டிருந்தார்கள். இவர்களெல்லாம் நம்ம வீட்டிற்கு வருவதே அபூர்வமல்லவா! ஏதோ வழி தெரியாமல் வந்து விட்டார்கள்.

கோவி:—ஓகோ! ரொம்ப சந்தோஷம். ஓலகா! நீ சொல்வது போல இவர்கள் எல்லாம் வழி மறந்து போய்தான் இங்கே வந்து விட்டார்கள். பெரிய மனிதர்களெல்லாம் கேவலம் பிச்சைக்காரர்களாகிய நம்ம வீட்டிற்கு வருவார்களா! சரிக்குச் சரியாக இருந்தாலல்லவோ கவனிக்க முடியும்?

வந்த:—என்ன சார்! இப்படி எல்லாம் பேசுகிறீர்கள்? நாங்கள் அப்படி வித்யாசமாக நினைக்கவே இல்லை. ஏதோ வேலைகள் தொந்தரவுதான் ப்ரமாதமாக விருக்கிறது. பணக்காரர்களாவது, பிச்சைக்காரர்களாவது. நாம் எல்லோரும் சமமாகத்தான் சார் இருக்கிறோம். இப்போது இந்த ஊரிலேயே சில காலமாக இருக்கிறோம். அக்காவையும் உங்களையும் பார்க்க வந்தோம். மற்றபடி எங்களுக்கென்ன பெரு வாழ்வு வந்துவிட்டது? அப்படி வித்யாசமாக நினைக்க வேண்டாம் சார்!

கோவிந்:—அடாடாடா! எனக்குத் தெரியாதா என்ன? வெறுமனே தமாஷுக்காகப் பேசினேன். எல்லோரும் சும்மாவா உட்கார்ந்திருக்க முடியும். ஏதோ வேலைகள்தான் இருக்கின்றனவே! அதுவே சரியாகி விடுகின்றன. ரொம்ப சந்தோஷம்.—என்றான்.

அவர்களும் உத்திரவு பெற்றுக்கொண்டு போய்விட்டார்கள். ஓலகாம்பாள் முன்னிலும் அதிக தடபுடலுடன் கோவிந்தனை வர

கண்டிப்பு இல்லாத மனிதர்களுக்குச் சுகமில்லை. கண்டிப்புடன் செய்யும் எக்காரியத்திலும் ஜெயம் கிடைக்கும். தேக சுகமும் கெடாது. பிறருக்கும் நம்மிடத்தில் ஓர் கடி புடி, மரியாதை, மதிப்பு இருக்கவைக்கும். வழவழ, கொழகொழ என்ற காரியம் அதேபோல்தான் ஆகும்.

வேற்று "வாருங்கள். எங்கே போய் வந்தீர்கள்? குழந்தைகளைப் பார்த்தீர்களா! குழந்தைகளை எப்போது அழைத்துக்கொண்டு வருவீர்கள்? எனக்குப் பொழுது போவதே இல்லை. மடத்தனத்தை எண்ணி எண்ணி வருந்துகிறேன். குழந்தைகளோடு விளையாடிக் களித்தால் சற்று சமாதானமாக விருக்கும். நாளைய தினம் அழைத்துக்கொண்டு வருகிறீர்களா ?" என்றாள்.

இது கேட்ட கோவிந்தன் "என்னமோ போ! அந்த சனிகளைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை. அவைகளை நான் நினைத்தாலேயே எனக்கு பெரிய ஆபத்து வந்து விட்டது; என் வேலை போய்விடும்போல விருக்கிறது. அது போய்விட்டால் பிறகு எப்படி ஜீவனம் செய்வது. வயிற்றுப் பிழைப்பிற்கு ஏதேனும் வழி செய்ய வேண்டாமா! இதுதான் கவலை வந்துவிட்டது. சரி அது கிடக்கட்டும். இவர்கள் எங்கே வந்தார்கள்? இவர்களால் நமக்கு ஏதாவது பிழைப்பிற்கு வழி கிடைக்குமா என்றும் நான் யோசிக்கிறேன். நீ என்ன சொல்கிறாய் ?" என்றான்.

ஒலகாம்பாளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. தான் அகப்பட்டுக்கொள்ளாது காரியம் செய்யவேண்டுமென்பதே அவளுடைய கருத்து. தன்னுடைய புதிய நாடகத்தை அவன் தெரிந்துகொள்ளவில்லை என்றே எண்ணி இருக்கிறாள்; ஆதலால் அவள் வெகு பரிவாகப் பேசுபவள் போல " அப்படியா ! உங்கள் வேலையா போய்விடும் போலிருக்கிறது. ஏனப்படி? அப்படி போய்விட்டால் நம் பாடு மிகவும் திண்டாட்டமாகிவிடுமே! இவர்கள் மிகவும் நல்லவர்கள். கேட்டால் கிடைக்குமென்றுதான் தோன்றுகின்றது. நான் வேண்டுமாயின் கேட்டுப் பார்க்கட்டுமா ?

கோவி :—அடி பைத்தியக்காரி! நீ கேட்காமலும் நீ செய்யாமலும் எனக்கு வேறு யாரடி செய்வார்கள்? நான் உன்னுடைய தாச

தங்களிடத்திலுள்ள அல்பத்தனத்தை, ஒரு சிலர் அறிகிறார்கள்; அதை வெளியில் காட்டிக்கொள்ளாம லிருக்கவும் முயல்கிறார்கள். பலாப் பழத்தை மூடி வைத்தாலும் வாசனை யடங்குமோ? அதே போன்று இவர்களை யறியாமலேயே அந்த அல்பத்தனம் வெளியாகி விடுகிறதாம்.

ஞகிவிட்டேனே! எந்த விதத்தில் தொழிலைத் தேடிக் கொடுத்தாலும் செய்து பிழைக்கவேண்டுமல்லவா! அவர்கள் இப்போது எங்கே வந் திருக்கிறார்கள். இங்கே ஏதேனும் முக்கியமான ஜோலி இல்லாது வருவார்களா ! உன்னிடம் ஒன்றும் கூறவில்லையா ?

ஒல :—ஆமாம்! ஏதோ காரியமாக வந்திருப்பதாகத் தான் கூறினதுபோல நினைவு. மீண்டும் நாளைய தினம் வருவதாகக் கூறி யிருக்கிறார்கள். விவரமெல்லாம் நாளை கேட்டுவிடுகிறேன்...... ஆமாம்! நாதா! நமக்குப் பணமில்லாமலேயே பெருங் கஷ்டமாக விருக்கிறது.

கோவி :—ஒலகா! நான் என்னமோ அசட்டு மனிதனுய்—மூட னுய்—காலத்தைக் கழித்துவிட்டேன். பிறருக்கு உதவி செய்வது பெரும் புண்ணியமென்று எண்ணி ஏமாந்துவிட்டேன் அதெல்லாம் வீண் காரியம். எந்த மனிதனும் தன் வாழ் நாட்களுக்குள் எவ்வளவு பொருளீட்ட முடியுமோ, எந்தெந்த வழியில் பணம் சம்பாதிக்க முடியுமோ அந்த வழியில் எல்லாம் பணத்தைத் தேடிக்கொண்டால் தான் அவன் உலகத்தில் பிரவலித்தமாக வாழமுடியும். இந்த தத்து வத்தை இத்தனை நாள் தெரியாமல் பாழாகிவிட்டேன். நீ எடுத்துக் கூறியபோ தெல்லாம் உன்னைக் கடிந்துகொண்ட முட்டாளாகிவிட் டேன். இப்போதுதான் அதை உணர்ந்து வருந்துகிறேன். இனி என்ன செய்ய முடியும் ?

இதைக் கேட்டதும் ஒலகாம்பாளுக்குத் தலைகால் தெரிய வில்லை. தன் கணவன் தன்னுடைய நாட்டியத்தைக் கண்டு முற்றி லும் மாறிப் புது மனிதனுகிவிட்டான் என்று பூர்ணமாக நம்பிவிட் டாள். அறிவற்ற பெண்ணுயினும், ஆணுயினும் ஒருவர் தன் வயப் பட்டுவிட்டார்கள் என்பதைச் சொல்பமாக அறிந்தாலும் உடனே

எல்லோரையும் குற்றங் குறை கூறித் தூஷிப்பதேதான் பெருமை என்று சிலர் நினைக்கிறார்கள். பிறரோ, "ஆமாம், அவர்களின் பவிஷே அவ்வளவுதான். அவர்களின் பேச்சும் ஒரு பேச்சா! தூரத் தள்ளு." என்று அலக்ஷியமாகக் கூறிவிடுகிறார்கள். மேற்குறித்தவர்களுக்கு மதிப் பேது?

அவர்களை நம்பி தம்மிடமுள்ள ரகஸியங்களை ஒன்றுவிடாது கூறிக் களிப்பதும், பிறகு தவிப்பதும் சகஜமாகிவிட்டது. அதிலும் ஒல காம்பாள் தன்னுடைய நடிப்பினால் பிரம்மாண்டமான காரியத்தைச் செய்து முடிக்கவேண்டும். அதனால் தான் குபேரனாகவேண்டும் என்று கோட்டை கட்டிக்கொண்டிருக்கையில் தேடப்போன மூலி கை காலில் சுற்றியதுபோல—தனக்கு அநுகூலமாகக் கணவனின் புத்தி வெகு சடுதியிலேயே மாறிவிட்டதை யறிந்து அளப்பரிய ஆநந்தத்தை யடைந்துவிட்டாள். தான் ஓர் பெரிய மாடி வீட்டில் உல்லாசமாக உட்கார்ந்து இராணிபோலிருப்பதான பாவம் இப் போதே தோன்றிவிட்டது.

உடனே தன் கணவனை நோக்கி, "நாதா ? இந்த எண்ணமும் மாறுதலும் தங்களுக்கு இதுகாறும் உண்டாகாமலிருந்ததை இனி எண்ணி என்ன உபயோகம்? இனிமேல் நடக்கவேண்டியதை யல் லவா யோசிக்கவேண்டும்? இதோ பாருங்கள். உலகத்தில் பணக்கா ரர்கள் என்கிற பெரிய ஹோதாவிலிருப்பவர்களில் நூற்றுக்கு முக் கால்வாசி அனியாய வழியில் பொருள் தேடியவர்கள்தான். அவர்கள் பொருளை அனியாய வழியில் தேடியதனாலேயே கவுரவமோ, மதிப்போ குறைந்துவிட்டதா என்ன? நாய் விற்ற காசு குரைக்குமா நெய் விற்ற காசு மணக்குமா? அதில்லை பாருங்கள். பிறரை ஏமாற் றியோ! மோசம் செய்தோ! லஞ்சம் வாங்கியோ பணத்தை லக்ஷ லக்ஷமாகச் சேர்த்துவிடுவதும் தம்முடைய பெயர் ப்ரபலமாவதற் காகச் சில தர்ம ஸ்தாபனங்களை சில நாளைக்குச் செய்வதும்—பெரிய மனிதர்களுக்கு விருந்து முதலியன செய்வதும் இதுபோன்று பல காரியங்களைச் செய்து தமக்கு மிஞ்சியவர்களில்லை என்கிற பெரும் பட்டத்தைப் பெற்றுவிடுகிறார்கள். இதுதான் உலகத்தில் வழக்க மாக வரும் தர்மமாக விருக்கிறது.

பசு தாராளமாக இரண்டு படி பால் கறந்தாலும் அதை யொளித்து அரைப்படிதான் கறக்கிறது என்று சிலர் அல்பத்தனமாகக் கூறுகிறார்கள். வாங்கும்போது கால்படி பால் வாங்கிவிட்டு முக்கால்படி பால் வாங்குகிறேன் என்று சிலர் ஜம்பம் பேசுகிறார்கள். இதில் என்ன லாபம், பெருமை வந்து விடுகிறதோ!

யாரோ சர்வோத்தமராமே! அவரைப்போல மகானுபாவன் கிடையாது. தர்மதாதா கிடையாது. அவன்தான் கலியுகக் கர்ணன், சத்யவந்தன், கருணாமூர்த்தி; த்யாகத்வஜம் போன்றவன். ஏழைப்பங்காளன். என்று இப்படி எல்லாம் புகழும்படியான காரியங்களை வெளி ஜனங்களின் கண் முன்பாகச் செய்து பிரக்யாதியடைந்துவிட்டானும். ஆனல் இதற்குச் செலவான—ஆகும்—ஆகப்போகும்—பணமெல்லாம் யார் அப்பன் வீட்டுது தெரியுமா! எல்லாம் லஞ்சம் வாங்கிய பணமாம். கிராமத்து ஜனங்களிடத்தில் அதிகார தோரணையுடன் அடித்துப் பிடுங்கிய பணமாம். ஐயோ! எத்தனை குடியானவர்களின் வயிறு எரிந்த பணமோ! இவன் மனங் குளிர்ந்தது. உலகம் மெச்சுகிறது. இது அனியாயத்திலும் அனியாய மன்றோ?

நாதா! இன்னொரு அக்ரமம் பாருங்கோ: இவன் யாரோ ஒரு தேவடியாளுடன் சிநேகமா யிருந்தானும். அவளுக்குப் பிறந்த பெண்ணைத் தன் பெண்ணென்று வீட்டில் பகிரங்கமாக வைத்துக் கொண்டிருக்கிறானும். இன்னும் தெரிந்தவர்கள் யாராவது கேட்டால் இது ஏழைப் பெண். தெருவிலிருந்து தேடி எடுத்து வந்தேன் என்று ஜம்பங் கூறுகிறானும். தேவடியாளின் மகள் எப்படி இருப்பாள். தேவடியா புத்தியுடன்தான் இருக்கிறாளாம். இவன் எந்த வழி பணத்தைத் தேடினனே அந்த வழிதான் அது அழிந்து போகிறதாம். ஊம். இந்த வீண் சனியன் நமக் கென்னத்திற்கு? ஏதோ வார்த்தை வரவே சொன்னேன்.'' என்று ஒரு அத்யாயங் கூறி முடித்தாள்.

எரியும் அக்கினியில் எண்ணெயை ஊற்றுவது போல கோவிந்தனின் இதயம் கொழுந்துவிட்டு எரிகிறது. ஒன்றும் தெரியாமல் ஜடம் போலிருந்த இவளுக்கு இத்தனை விஷயங்களும் அந்தப்

தன்னுடைய ஊழல் குப்பைகள் வெளியாகிவிடப் போகிறதே என்கிற பயமின்றிப் பிறரை அனாவசியமாகத் தூஷிக்க, அதன் மூலம் தன்னுடைய நாற்றம் வெளிக் கிளம்பி ஊர் சிரிக்கும்படியாக பிறகு கையைப் பிசைந்து பலன் என்ன?

பயல்கள்தான் உரு ஏற்றி இருக்கிறார்கள். இவளைக் கொண்டு ஏதோ வேலையை முடிப்பதற்கே இம்மாதிரி செய்திருக்கிறார்கள் என்பதைக் கூறவேண்டுமா? அடாடா! தர்மதாதா வென்றால் அந்த தியாகமூர்த்திக்கல்லவோ தகும். மற்ற ஊத்தை வாயால்—நாற்ற வாயால்—அம் மகானுபாவனை இழிவாகக் கூறினால் கடவுளுக்குச் சகிக்குமா! த்ரோகிகளா! சண்டாளக் கூட்டங்களா! ஆகட்டும். வைரத்தைக் கொண்டு வைரத்தை அறுப்பது போலும்—விஷத்தைக் கொடுத்தே விஷத்தை இறக்குவது போலும்—நான் இச் சமயம் இச் சண்டாளர்களின் கூட்டத்திற்கு அனுகூலமாகவே இருந்து அத் தியாக மூர்த்தியின்பால் விளைவிக்கப் போகும் இன்னலைக் களைய வேண்டும். ஹா! நல்லவர்களைக் கெடுக்க முயலும் நமன்கள் யாராக விருந்தாலென்ன? மனைவியாகட்டும், மக்களாகட்டும். என்னுயிரைக் கொடுத்தேனும் உத்தமரைக் காத்து இத் துரோகியைப் பழி வாங்கி விடுகிறேன்.'' என்று தனக்குள் சபதம் செய்துகொண்டான்.

ஒன்றுமே தெரியாதவன் போல, "என்ன! என்ன! அந்த உத்தமன் தேடிய பொருளெல்லாம் மோசமானதா? லஞ்சம் வாங்கியதா? அட அனியாயமே! இந்த மர்மத்தை யார் உனக்கு இத்தனை விரிவாகக் கூறினார்கள்? சீச்சீ! இவனெல்லாம் பெரிய மனிதனாக உலாவுகிறானே. என்ன ஓலகா! இது உண்மைதான் என்று உனக்குத் தெரியுமா! அப்படியாயின் நானே அவன் வள்ளலைக் கிழித்து ஏழைகளின் மனங் குளிரச் செய்வேனே! லஞ்சம் வாங்கும் வஞ்சகனா அவன்?'' என்று மெல்ல ஓர் சரடு விட்டான்.

ஓல:—ஆமாம்னுக்கா! நிஜமாகத்தான் அவன் பலே மோசக்காரனும். நாதா! இத்தனை விஷயங்களை நாம் அன்யோன்யமாகப் பேசிக்கொண்ட பிறகு இனி மூடுமந்திரமென்ன? இந்த படுபாவி கிராமத்து ஜனங்களிடத்தில் வாங்கிய லஞ்சமும்—தன் கீழ்ப்படிந்த உத்யோகஸ்தரிடம் வாங்கிய லஞ்சமும் கணக்கு வழக்கில்லையாம்.

சில குள்ளநரிகள் வீட்டிற்கு வருவது ஆழம் பார்ப்பதற்காகவே என்பது முதலில் தெரியாவிடினும் பிறகு தெரிந்தே விடுகிறது. அதற்கு மேல் இந்த பாச்சா பலிக்குமா!

அவர்கள் எல்லாம் சேர்ந்து இந்தப் படுபாவிமேல் சொல்ல முடி யாத காரம் வைத்துக் கொண்டிருக்கிறார்களாம். பழிக்குப் பழி வாங்கி இவனைத் தொலைத்து விடுவதே சரி என்றும் கங்கணங் கட்டிக் கொண்டிருக்கிறார்களாம். கேட்டீர்களா! இப்போது இவர்கள் வந் திருப்பது அது விஷயமாகத்தான் என்றுங் கூறினார்கள். ஊர் ஏழை ஜனங்களின் வயிற்றிலடித்து அழவைத்த இவன் பெரிய தர்மிஷ்டனாம். என்ன அனியாயம் பாருங்கள். இவனைப் பழி வாங்க வேண் டிய மார்க்கங்கள் பற்பல தேடித் தக்க சாக்ஷிகளும் வைத்துக்கொண் டிருக்கிறார்களாம். அந்த கதைகளைத்தான் இத்தனை நேரம் சொன் னார்கள்.

கோவி:—ஓகோ! அப்படியா சங்கதி. ரொம்ப சந்தோஷம். இத்தகைய திருடர்களுக்குத் தக்க தண்டனை செய்வது மிகவும் சரி யானதேதான். என்னைக்கூட சேர்த்துக் கொண்டால் நானும் இதில் வெகு ஊக்கத்துடன் வேலை செய்வேன்.

ஓல:—ஆகா! அதற்கென்ன ப்ரமாதம்? அவர்கள் இங்கு வந் ததன் காரணமே என்னுடைய ஒத்தாசையை நாடித்தான். இன்னும் நீங்களும் செய்வதா யிருப்பின் இரட்டைத் தேங்காய் உடைத்தார்ப் போலாகும். இதில் முக்கியமான பெரிய மனிதர்கள்—பணக்காரர்கள் —இருக்கிறார்களாம். அவர்கள் தலைக்கு 500 ரூபாய் கொடுக்கப் போகிறார்களாம். அதையும் சொன்னார்கள்......அடாடா! பேசிக் கொண்டே இருந்ததில் நேரமாகி விட்டதே! சாப்பிட வாருங்கள். மணியைப் பார்த்தீர்களா! 10 அடிக்கிறது—என்று வெகு அனுதா பத்துடன் கூறினாள்.

குள்ளனுக்குள் கள்ளன் ஆழம் பார்ப்பது போல கோவிந்தனின் நடிப்பு பெரிதா, ஓலகாவின் நடிப்பு பெரிதா! எது ஜெயிக்கும், எது தோற்கும் என்ற நிலைமையில் நாடகம் ஆரம்பமாகிவிட்டது.

தன்னுடைய கடமையில் சற்றும் பிசகுவதில்லை என்று பலரிடம் ஜம்பங் கூறுகிறார்கள் சிலர். அந்த சிலர்தான் தம்முடைய சகல காரியத் திலும் பிசகாகவே நடக்கிறார்கள். இதை அறிந்தேதான் மேற்படி ஜம்பம் கூறுவதோ! அன்றி அறியாமல்தா னிருக்கிறார்களோ! தெரிய வில்லை.

கோவிந்தன்:—போடீ! சாத மிருக்கட்டும். இந்த விஷயத்தி லேயே என் மனம் லயித்துவிட்டது. இதைப்பற்றி யோசிக்கிறேன். சரி: நாளைய தினம் அவர்கள் வரும்போது நான் இருந்தால் நானே இந்த விஷயத்தைப்பற்றிப் பேசுகிறேன். இல்லையேல் நீயே சகலத் தையும் விசாரித்து வைத்துக்கொள். ஊம்...மறந்து போயிடாதே: தெரியுமா! போலி பெரிய மனிதனின் தலையை மொட்டை யடிக்க வேண்டும். சரியான தண்டனை செய்யவேண்டும்.—என்று ஆக்ரோ ஷத்துடன் கூறி ஓலகாவின் சந்தோஷத்தை அதிகப் படுத்தியதோடு "ஓலகா! நீ அவர்கள் எப்படி எப்படி நடக்கச் சொல்கிறார்களோ, அப்படிக்கெல்லாம் தட்டாமல் நடந்து ஒரு பெரிய காரியத்தைச் சாதித்து விடு. ஜாக்ரதை." என்று தட்டிக் கொடுத்தான்.

இனிமேல் கேட்க வேண்டுமா? ஓலகாவின் பாடு பொங்கல் பானை போல் பொங்குகிறது; குதிக்கிறாள். மறுநாள் என்று வரும் என்ற எதிர்பார்ப்பு உடனே வந்துவிட்டது. கோவிந்தனுக்கோ, "அடாடா! ஒரு மகானுபாவனைக் கெடுப்பதற்காக இத்தனை பேர் கங்கணங் கட்டிக் கொண்டிருப்பதற்கு என்ன காரண மிருக்கும்? அவரைப்பற்றி உலகமே கொண்டாடுகையில் இந்த ஒரு சாரார் ஏன் இப்படி விரோதி யாகவேண்டும்? இதற்குக் காரணத்தை முத லில் அறியவேண்டும்." என்ற எண்ணத்திலேயே மனம் வெகுவாக வேலை செய்கிறது. இரவு முற்றும் தூக்கமே கொள்ளாது இருவரும் இருவிதமாகத் தவித்தார்கள்.

பொழுதும் புலர்ந்தது. கோவிந்தன் தான் ஏதோ முக்கிய காரியமாகப் போவதாயும் வருவதற்கு நேரமாகும் என்றும் கூறி விட்டு நேரே உத்தமரின் வீட்டிற்குத் தைரியமாக வந்தான். அங் குள்ள வேலைக்காரர்களில் யார் யார் பழைய மனிதர்கள். யார் யார்

சில வேலைக்காரர்கள் கொடுத்த வேலையைச் சரியாய் செய்யாமல் இழுக்கடித்துச் சலிக்கச் செய்து விடுவதுடன் "பின்னும் பின்னும் வேலை இல்லையா! கொடுக்கக் கூடாதா" என்று தொந்தரவு செய்கிறார்கள். வேலை வருவதற்கு முன்பு இருக்கும் பரபரப்பு வேலை வந்த பிறகு இருந்தாலன்றோ!

புதிய மனிதர்கள்? யார் யார் நல்லவர்கள்? யார் யார் சூதுக்காரர்கள்? என்பதை முதலில் அறிய அவன் மனம் தூண்டியது. முன்பக்கம் கேட்டில் ஓர் வயதான தொண்டு கிழவன் பாரா உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான். உடனே ஒரு யோசனை தோன்றியது. திடீரென்று இவனைப் போய் இதைப்பற்றிக் கேட்டால் சந்தேகிப்பதற்கு இடம் ஏற்படும்; ஆதலால் இந்த யுக்திதான் செய்யவேண்டும்.'' என்று தீர்மானித்துக்கொண்டு வெளியில் சென்றான்.

நேரே கடைக்குச் சென்று ஒரு ஜோடி வேஷ்டியும் அங்கவஸ்திரமும், தின்பண்டங்களில் சிலவும் வாங்கிக்கொண்டு மீண்டும் அதே கேட்டுக்கு வந்து அந்த பெரியவரைப் பார்த்து "தாதா! நமஸ்காரம்.'' என்று சாஷ்டாங்கமாக விழுந்து,வணங்கி எழுந்தான். திடீரென்று ஒருவன் தன்னை வணங்கியதைக் கண்ட தங்கவேலு என்ற அக்கிழவன் வியப்புற்று "யாரப்பா! மகாராஜனாய் தீர்க்க ஆயிசுடன் இருக்கவேண்டும். திடீரென்று எதற்காக என்னை வணங்கினாய்? நீ யாரு, என்ன?'' என்று கேட்டான்.

கோவி:—தாதா! நான் ஒரு பேரன் என்று வைத்துக் கொள்ளுங்கள். என்னுடைய பாட்டனார் தேக வியோகமாகி சில வருடங்களாகி விட்டன. அவர் உயிர் துறக்கும்போது எங்களுக்கு ஒரு உத்திரவிட்டார். அதாவது பிரதி வருஷமும் நான் இறந்த நாளைக் கொண்டாடி திவசம் செய்வது ஒருபுறமிருக்கட்டும்; என்னைப் போல ஓர் வயதான—உத்தமமான—கிழவருக்கு ஒரு ஜோடி வேஷ்டியும் தின்பண்டமும் வாங்கிக் கொடுங்கள். அப்போதுதான் என் ஆத்மா சாந்தியாகும்'' என்று கூறி, உயிர் துறந்தார்.

அவர் மகா பரிசுத்தவான். சத்தியத்திற்குக் கட்டுபட்டவர். சதா தெய்வத் தியானமே செய்பவர். ஆதலால் அவரை உத்தேசித்துக் கொடுக்கும் மனிதரும் சற்றேறக்குறைய அவரைப்போலவே

தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்னும் பிடிவாதக்காரப் பேர்வழிகளும், பொக்கை வாய் தாத்தாவின் (மகாத்மாவின்) பொன்மொழிக்கு மீறமுடியாது. அபாரமான வசிய சக்தி வாய்ந்த சத்யாக்ரகி யல்லவா அந்தத் தியாகமூர்த்தி!

இருக்கவேண்டு மல்லவா? என் வீட்டிற்குப் பக்கத்து வீட்டிலேயே ஒரு கிழவர் இருந்தார். அவர் மகா யோக்யர். அவருக்கே இத்தனை நாளும் கொடுத்து வந்தேன். சில மாதங்களுக்கு முன்பு அவர் சிவ பதமடைந்து விட்டார். அது முதல் இவ் வருடத்திய திதிக்கு யாரைத் தேடுவது என்று கவலையுடன் தேடிக்கொண்டே இருந்தேன். கலியுகக் கர்ணனென்று உலகம் புகழும் உத்தமரின் வீட்டில் வெகு காலமாக வேலை செய்யும் நீங்கள்தான் அதற்குத் தகுதியானவர்கள் என்று என் சிநேகிதர்கள் கூறினார்கள். அதனால் இங்கு தேடிக்கொண்டு வந்தேன். தயவு செய்து இதை அங்கீகரித்து என் மனத்தைச் சந்தோஷிப்பிக்க வேண்டும்.'' என்று வேண்டினான்.

இதைக் கேட்ட தங்கவேலு நகைத்துக்கொண்டே ''அப்பா! உன் மனத்திற்குத் திருப்தியாக நான் இதை ஏற்றுக்கொள்ளத் தடை இல்லை; எனினும் ஒரு விஷயம். அந்த கடவுளின் கிருபையினால் இந்த சர்வோத்தமரின் நிழலில் நான் வெகு நாளாக மேன்மையாகவே—உணவுக்கும், உடைக்கும், நிழலுக்கும் சிறிதும் பஞ்சமில்லாமலேயே—இருக்கிறேன். அந்த மகானுபாவன் பல்லாண்டு பல்லாண்டாக நீடூழி காலம் மார்க்கண்டேயனைப் போல வாழ வேண்டும்' அந்த தியாகமூர்த்தி இருக்கும் வரையில் எங்களுக்குப் பஞ்சமென்பதே காணமுடியாது. இந்த வேஷ்டியை வேறு ஏழைக்குக் கொடுத்தால் இன்னும் திருப்தியாய், சந்தோஷமாய் ஏற்றுக்கொள்வான். ஏனெனில் எந்தப் பொருள் எவனுக்கு இல்லையோ அவன் அதைப் பெற்றால் அவன் உள்ளம் அபரிமிதமாகக் களிக்கும். அந்த சந்தோஷம் கொடுத்தவனின் குடும்பத்தைக் காக்கும். அதனால் கூறுகிறேன். உட்காரப்பா: நிற்காதே.'' என்று நயமாகக் கூறினார்.

அம் மொழியைக் கேட்ட கோவிந்தன் ''தாதா! இதோ உட்காருகிறேன். தாங்கள் சொல்வதும் ஒரு விதத்தில் பொருத்த

கடன் கேட்கவோ லஜ்ஜை, கையிலோ காசில்லை; வேலையோ முடிய வேண்டும், மகா மானி, என்ன செய்வது? கடவுள் சமயத்தில் கைவிடாது, ஒரு சிநேகிதனை யனுப்பித் திடீரென்று தேவைக்குச் சரியான பணத்தை 'வட்டிக்கு கொடுக்கத் தகுந்த மனிதர்கள் இருந்தால் சொல்லேன்' என்று

மானதேதான். உங்களைப் போன்ற தகுந்த மனிதர் யாரோ எனக்குத் தெரியாது. நீங்களே கூறினால் அப்படியே கொடுக்கிறேன். தங்கள் எஜமானரின் மகிமைக் கேற்ப தாங்களும் தயாளத்தனத்துடன் சேர்ந்திருப்பது வியக்கத்தக்கது. எத்தனை பணக்காரர்களாக விருப்பினும் 'வேண்டாம்.'' இம்மட்டும் போதும்; என்று கூறும் மனிதர்கள் கிடைப்பதே அபூர்வம். அதிலும் சாதாரண தொழில் செய்யும் மனிதர்கள் கூறுவது அதிசயத்திலும் அதிசயமாக விருக்கிறது. எஜமானரிடத்தில் வேலைக்காரர்களும், வேலைக்காரர்களிடத்தில் எஜமானர்களும் உள்ளார்ந்த பிரியத்துடன் இருப்பதும் ஆச்சரியந் தான். பத்து பணியாளர்கள் ஒரு இடத்திலிருந்தால் எல்லோரும் ஒருவரைப்போலவே இருப்பதில்லை. ஏதோ நூற்றில் ஒரு விதத்தில்தான் அப்படி இருக்கிறார்கள்.

182966

எரிகிற வீட்டில் பிடுங்கினது லாபம் என்பது போல எஜமான் கொடுக்கும் சம்பளத்தையும் வாங்கிக்கொண்டு வீட்டில் உண்மையாக உழைக்காமல் கிடைத்ததைத் திருடிக்கொண்டு மோசமும் செய்கிறார்கள் சிலர். எஜமானிடம் உண்மையான பக்தி இல்லாதவர்கள் எஜமானருக்கு யார் பகைவர்களோ, யார் பிடியாதவர்களோ அவர்களிட மெல்லாம் நட்பு கொண்டு பேசுவதும், எஜமான் வீட்டுச் சங்கதிகளை கால், அரை காசை வாங்கிக்கொண்டு திருட்டுத்தனமாகக் கூறித் துரோகம் செய்வதும் இதனால் பிறகு இரு இடங்களிலும் அதோகதியாகி விடுவதுமாகச் சில பாவிகள் இருக்கிறார்கள். இங்குள்ளவர்க ளெல்லாம் தங்களைப் போன்றே பக்தியுடன் இருப்பார்களா?'' என்று மெல்ல கேள்வியை விட்டான்.

தங்க:—அப்பனே! நீ கூறுவது மிகவும் சரியான வார்த்தையே! எங்க எஜமானரைப் போன்ற மனிதர்கள் இவ் வுலகத்திலேயே அவரைத் தவிர வேறு யாருமில்லை என்று திட்டமாகக் கூறுவேன். அத்தகைய மகானுபாவன் வேலைபாட்களுக்குச் செய்யும் சௌகரி

கேட்கச் செய்கிறார். உடனே சிநேகிதன் தன்னிலைமையைக்கூறி, அதே பணத்தைத் தான் கடன் வாங்கிக்கொண்டு, தன் காரியத்தையும் முடித்து சிநேகிதனுக்கு வட்டியுடன் திருப்பிக் கெடு பிசகாது கொடுத்து விடுகிறான். கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பது பொய்யாகுமா?

யமோ கூறவே திறமன்று. மகா தயாளம் பொருந்தியவர். ஒவ்வொரு வேலைக்காரரும் இப்படி இப்படி நடக்கவேண்டும் என்று திட்டம் கூறிவிட்டால் பிறகு அதன்படி நடக்கிறார்களா என்பதைச் சில தினங்கள் கவனிப்பார். அவர் மனத்திற்குத் திருப்தியாக நடந்தால் அவர்களை எடுக்கமாட்டார். இல்லையெனில் விலக்கி விடுவார். இது தான் அவர் செய்யும் தண்டனையாகும். இதற்குமேல் அம் மகானுபாவன் எதையுமே கவனிக்கமாட்டார். அந்த தரும லக்ஷ்மியும் அப்படித்தான். நான் இந்த வீட்டில் இவருடைய தகப்பனார் காலம் முதல் இருக்கிறவன்.

8 வயது பையனாக முதலில் வேலைக்கு வந்தேன். இவர்கள் பரம்பரையை எல்லாம் எனக்குத் தெரியும். இப்போது எனக்கு வயசு 80க்கு மேலாகிறது. எஜமான் என்னவோ வேலையே செய்ய வேண்டாம். இந்த வீட்டிலேயே சாப்பிட்டுக் கொண்டிரு என்று கூறி சில வருடங்களாகவே நிறுத்திவிட்டார். எனக்குத் தான் உட்கார்ந்திருக்கப் பிடிக்காமல் இந்த பாராவிலாவது இருக்கிறேன் என்று கூறி இருக்கிறேன். மற்ற வேலைக்காரர்களைப் பற்றி நான் தான் அடிக்கடி கவனித்துக்கொண்டு வருகிறேன். இதுவரையில் எல்லோரும் எஜமானரிடம் விச்வாசிகளாகவே இருந்து வருகிறார்கள். அதில் ஒன்றும் குறைகளில்லை. கடவுள் கிருபையில் எஜமானர் அமோகமாக வாழணும்.

கோவி:—ஆகா! தாதா! உங்கள் எஜமான விச்வாசத்தைக் காண உள்ளம் பூரிக்கிறது. இப்படிப்பட்ட வேலைக்காரர்கள் தலைமுறை தத்துவமாக வந்தால் அவர்களுடைய குடும்பத்திற்கும் எஜமானரின் குடும்பத்திற்கும் என்றும் சுகமே விளையும். எஜமானருக்குக் குழந்தைகள் எத்தனையோ!

அந்தோ! நம் நாட்டிற்கே ஓர் தந்வந்திரியாக—உயிர்ப் பிச்சை கொடுக்கக்கூடிய கற்பகத்தருவாய் விளங்கிய டாக்டர் ரங்காச்சாரியாரின் மரணத்தைக் குறித்து எந்த மனிதர்தான் துக்கிக்காம லிருக்கமுடியும்? இந்த குறையை நிவர்த்திக்க இன்னொரு ரங்காச்சாரியாரைக் கடவுள் சீக்கிரம் மக்களுக்கு அளிப்பாரா! மனக் குறையைத் தீர்ப்பாரா?

தங்க:—அப்பா! அந்த பாக்யத்தைத்தான் கடவுள் குறைத்து விட்டார். எஜமானின் குழந்தைகள் என்று எடுத்துச் சீராட்டும் பெருமையை நாங்கள் படைக்கவில்லை; எனினும் எஜமானருக்கு என்னவோ அக் குறை சிறிதுமில்லை. ஊரிலுள்ள குழந்தைகள் எல்லாம் அவருடையவைதான். எல்லோரிடத்திலும் சமமான அன்பு கொண்டிருக்கிறார். மேலும் (இன்பமணியின் விஷயத்தைக் கூறி) அவருடைய சொந்த குழந்தையைவிட ஆயிரம் பங்கு அதிகரித்த செல்வாக்காக புத்திரப் பேரன்புடன் வளர்க்கிறார். அந்த குழந்தையும் வெகு பக்ஷமாயும், நன்றி விச்வாசத்துடனும் இவர்களே தெய்வமென்று மதிக்கும் தருணீமணியாய் விளங்குகிறாள். அது ஆச்சரியமல்லவா ?

கோவி:—ஆகா! மிக மிக ஆச்சரியகரமானதே! நன்றி விச்வாசம் இக் காலத்தில் அனேகருக்குக் கிடையவே கிடையாது. நல்லது செய்தோரை நெஞ்சு நோகச் செய்வதே தமது தருமம் என்று சிலர் நினைக்கிறார்கள். அத்தகைய சண்டாளர்கள் அதன் பலனை சீக்கிரத்திலேயே அடைவார்கள். செய்ந்நன்றி மறந்த எவர்தான் சுகமாக வாழ்ந்திருக்கிறார்கள்? எஜமானருடைய அருமையான குணத்திற்கும், தியாகச் சிந்தைக்கும் விரோதிகள்கூட இருப்பார்களா! ஒரு போது மிருக்கமாட்டார்கள்.

தங்க:—அப்பா! அப்படி நினைக்காதே! சாக்ஷாத் எம்பெருமானே மனித அவதாரங்கள் செய்திருந்தும் அவருக்கு எத்தனை சத்ருக்கள் தோன்றினார்கள். கேவலம் மனிதர்களுக்குச் சத்ருக்கள்—விரோதிகள்—இருப்பது சகஜமல்லவா? எங்க தரும தேவதைக் கொப்பான எஜமானருக்கும் சில விரோதிகளிருக்கிறார்களப்பா! அப்பாதகர்களுக்கு எங்க எஜமானர் மனத்தினால்கூட தீங்கிழைத்தது கிடையாது. எஜமானரைத் தேடித் தானாக வந்துலாவும் தன

எஜமானத்வம் பாராட்டி அகம்பாவத்துடன் அதட்டி மிரட்டி கண்டபடி திட்டினால் அந்த எஜமானர்களிடத்தில் வேலைக்காரர்கள் ஒரு வினாடி நிற்பதும் அபூர்வந்தான். வேலைக்காரர் அகப்படவில்லையே என்று தேடும்போது தம்முடைய கடினமான தன்மையை சற்று எண்ணினால் வேலைக்காரர்கள் விலகமாட்டார்கள்.

லக்ஷ்மி, தைரிய லக்ஷ்மி, புகழ் லக்ஷ்மி முதலியவர்கள்மீது பொறாமை கொண்டு சில பாதகர்கள்—அவருடைய தாய்வழி உறவினர்கள்—விரோதித்து வருகிறார்கள். சில கிராமங்களில் அடியோடு விளைவு இல்லாது, உணவுக்கே வருந்தும் பரம ஏழைகளுக்கு மனமிரங்கி இவரே தன் பணத்தில் சர்க்கார் வாயிதாவைக் கட்டி அவர்களுக்கு உதவி செய்திருக்கிறார்.

அவ் வூரிலேயே உள்ள சிலருக்கு சுமாரான விளைவு இருக்கிறது. அவர்களுக்கும் சர்க்கார் தீர்வையை இவரே கட்டவில்லை என்று இவர்மீது க்ஷாத்திரம் கொண்டு மடத்தனமாக விரோதித்துக்கொண்டிருக்கிறார்களாம். அவர்களுக்குள்ள வருவாயில் சூதாட்டத்திற்கும், கட்குடிக்கும் வேசிக்கும் தொலைப்பதை எஜமானர் கண்டு பிடித்து விட்டார். இவ்வித அனியாயத்திற்கெல்லாம் செலவழிக்கும் பணத்தை ஏன் கிஸ்தி கட்டக்கூடாது. சர்க்காரை மோசம் செய்வதற்குப் பணமில்லை. இந்த அக்ரமச் செலவிற்குப் பணமிருக்கிறதோ! இத்தகைய பாவிகளுக்கெல்லாம் உதவி செய்யக் கூடாதென்று எஜமானர் சொல்லி விட்டார். இது நியாயமா, அநியாயமா? அப்பனே! நீயே சொல்லு.

இன்னும் சில கிராமங்களில் கள் குடி மிக மிக அதிகமாய் விட்டதாயும், அவ்வூரே அதனால் அழிந்து போகிறதென்றும் அங்குள்ள பெண்கள் எஜமான் அங்கு சென்றிருந்த காலத்தில் முறையிட்டார்களாம். எஜமான் சில பிரசார கோஷ்டியை நியமித்து அந்த ஊரில் கள் குடியே ஒழிய வேண்டிய ஏற்பாட்டைச் செய்து விட்டார். இதனால் குடி மட்டுப்பட்டு விடவே கள்ளுக் கடைக்காரர்களுக்கு எஜமான்மீது த்வேஷமாம். இப்படி பலவிதமான மூடர்கள் அவர்களின் போதாக் காலத்திற்கே பகைவர்களாகி இருக்கிறார்கள். உம். உலகம் இப்படித்தான்.

எத்தனையோ லக்ஷ லக்ஷமாகப் பணம் புரளக்கூடிய பெரிய குடும்பத்தில் ஆண்களும் பெண்களும் வெகு சர்வ சாதாரணமாய் ஆடம்பரமின்றி வேலைக்காரர்களையும் தம் மனிதர்கள்போல பாவித்து நடக்கிறார்கள். அவர்கள் வீட்டு வேலைக்காரர்களோ, பென்ஷன் வாங்கிக்கொண்டும் அவர்களிடம் விட்டுப் பிரிய மனமின்றித் தவிக்கிறார்கள்.

கோவி:—அப்படியா! இந்த மகானுபாவனுக்குக்கூடவா சத்ருக்களிருக்கிருர்கள்? என்ன அனியாயம்! ஐயோ! அவர்களால் அவருக்கு ஒரு தீங்கும் நேராமலிருக்க வேண்டுமே. இது கவலையாக விருக்கிறதே! கடவுளை நம்பிய பக்தராயிற்றே அவர். அவருக்கொரு குறைவும் வராது......தாதா! நான் வரட்டுமா! நேரமாகி விட்டது. இதைத் தாங்க ளெடுத்துக் கொண்டாலும் சரி; வேறு தக்க மனிதருக்குக் கொடுத்தாலும் சரி. நான் சென்று வருகிறேன். உத்திரவு கொடுங்கள்.

தங்:—போய் வாப்பா! அடிக்கடி வந்து கொண்டிரு. உன்னைப் பார்த்தால் நல்ல மாதிரியாக இருக்கிருய்: எனக்குப் பிடித்திருக்கிறது. இத்தகையோரை எஜமான் பார்த்தால் விடவே மாட்டார். ஏம்பா! உனக்குக் குழந்தை குட்டிகள் எத்தனை? உன் ஜாகை எங்கே! ஒன்றும் விசாரிக்காமல் ஏதோ பேசிக் கொண்டிருந்தேனே!

கோ:—தாதா! தற்போது நான் ஓர் சன்யாசி என்றே கூறலாம். குழந்தைகள் கிடையாது. மனைவி இருந்தும் இறந்ததற்குச் சமமே. ஆகையால் சம்சாரத்தில் வெறுப்பும் கசப்பும் கொண்டு நான் துறவிபோலாய் விட்டேன். அது ஓர் பெரிய கதை......நான் வரட்டுமா!...ஞாபக மிருக்கட்டும்.—என்று கூறி விடைபெற்றுக் கொண்டு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு வந்தான்.

வீட்டிற்கு போய்ப் பார்த்தான். தன் மனைவியைக் காணவில்லை. உடனே தூக்கி வாரிப் போட்டது. அந்த கூட்டங்களைத் தேடிக்கொண்டுதான் போயிருப்பாள் என்று திட்டமாகத் தெரிந்து விட்டது. தன்னுடைய முக்யமான சாமான்களில் சிலவற்றை எடுத்துக்கொண்டு வெளியில் சென்ருன்.

* * * * *

தான் எத்தனையோ நல்ல எண்ணங்களை எண்ணி, வெகு தூரத்திலிருந்து லீவு வாங்கிக்கொண்டு வர, தான் வந்த காரியம் ஒரு சிறிதும் முடிவடையாமலிருக்கையில் திடீரென்று தானே இம் மண்ணுலகை விட்டு மறையும்படியாக நேர்ந்து விடுகிறது. அந்தோ! என்ன பரிதாபம்!

இன்பமணியும், ரங்கமணியும் நிமிடம் ஏற ஏற தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இரவு பன்னிரண்டு மணிக்கு உத்தமரின் கார் வரும் ஓசை கேட்டு இரு மடந்தையரும் வீதியில் வந்து நின்றார்கள். உத்தமர் முன்போலவே வாட்ட முகத்துடன் இறங்கி "என்ன இது? இன்னுமா நீங்கள் இரண்டு பேரும் தூங்கவில்லை! ஏன் நிற்கிறீர்கள்?" என்று கேட்டவாறு உள்ளே;வந்தார்.

இன்பமணி:—அப்பா! இதென்ன இப்படிக் கேட்கிறீர்கள்? தாங்கள் சாயங்காலம் முக வாட்டத்துடன் சென்றது முதல் எங்களிருவரின் மனமும் தாமரையிலைத் தண்ணீர்போல தத்தளிக்கின்றது. நகமும் சதையும் எப்படியோ அப்படி யல்லவா அப்பா நாம் மூவரும் ஒன்றல்லவா! தங்கள் முகம் வாட்டமடைந்தால் எங்கள் கண் கலங்காதா! இப்பவும் கேட்கிறேன். விசனத்தைக் கூறுங்களப்பா?

ரங்க:—நாதா! உடலை விட்டு உயிர் வேறாகப் பிரிந்து ஜீவித்திருக்க முடியுமா! அது தெரிந்த தாங்கள் என் கவலையை அறிய மாட்டீர்களா! நாம் என்னவோ ஏகாங்கிகள். நமக்குள் எந்த விதமான கஷ்டங்கள் வந்த போதிலும் சமமாக அறிந்து அனுபவிப்பது தான் அழகு. என்னைத் தனித்து வருத்தாதீர்கள்—என்று மன்றாடினாள். இரு பெண்மணிகளும் உத்தமரின் காலைப் பிடித்துக்கொண்டார்கள்.

இதற்குமேல் உத்தமர் என்ன செய்வார் பாவம். ஒன்றுமே தோன்றவில்லை. போஜனத்திற்கு அழைத்தும் மறுத்துவிட்டார். "மணீ! என் செல்வீ! இன்பமணீ! வீண் கவலைப்பட்டுக் கலங்கவே இருவரும் ப்ரியப்படுகின்றீர்களா! இதோ பாருங்கள். இக் கடிதங்களைப் படியுங்கள்" என்று கூறித் சில கவர்களை எடுத்துப் போட்டார். இன்பமணி அவற்றை வெகு ஆவலுடனும்,பரபரப்புடனும் படிக்கத் தொடங்கினாள்.

என்ன துக்ககரமான சம்பவம்! அக் குடும்பத்தினரின் உள்ளம் எப்படி இருக்கும்?... ஈசனின் சோதனை மனித வர்க்கத்தில் இப்படி இருக்கையில் தான் இதற்குள் எத்தனையோ அட்டகாஸமும், அலக்ஷியமும் அகம்பாவமும் கொண்டு உலகம் தலை கீழாகப் புரளுகிறது.

முதற் கடிதம்.

"அன்புள்ள ஐயா!

இக்கடிதம் உமக்கு வியப்பாக விருக்கலாம். நானும் வியப்பான இவ்விஷயத்தை யறிந்து முதலில் ஆச்சரியப்பட நேர்ந்ததால் இதை எழுதுகிறேன். நான் உத்யோக தோரணையில் உமக்கு எழுதுவதோடு இதுகாறும் பழகியதற்காக சாதாரண கடிதமாக எழுதுகிறேன். உலகமெல்லாம் உம்மைக் கொண் டாடும்படியான மார்க்கங்கள் பலவற்றைச் செய்திருக்கி றீர்கள். அவை எல்லாம் வெகு லோகோத்தாரமானவை என்று உலகமே மயங்கிப் போய்விடும்படிச் செய்து விட்டீர். ஆனால் அவைகளை எல்லாம் எந்த வகையில் பணந்தேடிச் செய்தீர் என் பது உமக்கு லஞ்சங் கொடுத்து வயிறெரிந்தவர்களுக்கன்றோ தெரியும். அந்த ரகஸியம் எத்தனை நாளாயினும் மறைந்தே இருக்க முடியுமா! தானாக வெளிவரும் காலம் வந்துவிட்டது.

ஐயா! சில ஏழைகளுக்கு நீரே வரியைச் செலுத்துவது போல நடித்து, உம்முடைய அச் செய்கையை மறைத்துக் கொண்டீர்! இப்போது மற்ற கக்ஷியினர் தகுந்த ஆதாரங்க ளுடன் உமது குற்றத்தை நிரூபிக்கத் தயாராக விருக்கிறார்கள் என்பதை நேரே ஆபீசுக்கே தெரிவித்துவிட்டார்கள். இந்த விஷயம் தீ போலப் பிடித்துக்கொண்டு உத்யோக சாலை பூராவும் பரவி வருகிறது. இந்த விஷயத்தைப்போல இன்னும் அநேக குற்றங்களையும் நீர் செய்ததாக அவர்கள் கூறுகிறார்கள். அதைப்பற்றி உத்யோக சாலைக்கு விசாரிக்குங் கடமை இல்லை. மேற் குறித்த விஷயத்திற்கு நீர் என்ன பதில் கூறுகிறீர் என் பதைக் கேட்கிறேன்.

இங்ஙனம்
அமலநாதன்."

வெண்ணெய் திரளும் சமயம் தாழி உடைந்தது என்ற பழமொழி சில குடும்பத்திற்கு உடனே பலித்து தத்தளிக்கச் செய்து விடுகின்றது. அக் குடும்பத் தலைவியின் கதியை எண்ணினால் ஆறுமா! தீருமா! அந்தோ! இம்மாதிரியான சோதனை சத்துருக்களுக்கும் வேண்டாம்.

இரண்டாவது

"ஐயா! உத்தமரே! பெயர் பெரிய பெயர்தான். செய்கையோ அடாடாடா! கூறத்திறமின்று. எங்கள் வயிறெரியச் செய்து வாங்கிய லஞ்சங்களல்லவோ இத்தனை புகழை உண்டாக்கின! எங்கள் சொத்து முழுவதுமே பாழாகிவிட்டாலும் உம்முடைய குட்டை வெளிக் கிளப்பாம லிருக்கப்போவதில்லை. இந்நேரம் சரியான ஆசாமியிடம் தகவல் சேர்ந்திருக்கும். இனிமேல் பசுத்தோல் போர்த்த புலிக் கதையைச் செய்ய முடியாது. போலி கௌரவ தர்ம ஸ்தாபன மெல்லாம் நடக்க முடியாது. ஜாக்ரதை.

கொடுத்து ஏமாந்தவர்கள்,"

மூன்றாவது

"சர்வோத்தமருக்கு!

நான் இதற்கு முன் பலதரம் நேரிலும் கடித மூலமாயும் சொல்லி இருக்கிறேன். நமக்குள் இத்தனை நாள் ஏதோ ஒரு வாறு இருந்த வேற்றுமையை இனி மறந்துவிட்டு ஒற்றுமையாக விருக்கவேண்டிய மார்க்கத்தைத் தேடவேண்டியது மிக முக்கியம். நம்முடைய சமாதானத்திற்கு ஒரே வழிதானிருக்கிறது. அது உமது வளர்ப்புப் பெண்ணை எனக்கு மணஞ் செய்வித்துக் கொடுப்பதுதான். அது வெகு சுலபமான காரியம். வசனங் கூறுவதில்லையா! ஒரு சட்டி நெருப்போடு ஒரு சட்டி பருப்போடு பிரிந்த உறவினர் கூடுவது. என்று. அது போல பருப்போடு சுபமாக நாம் கூடிவிடலாம். எப்படியும் நாம் ரத்தக் கலப்புள்ளவர்கள் என்பதை மறுக்க முடியாது. இக் காரியம் நடக்குமாயின் நமக்குள் சமரசமும் அன்யோன்ய பாவமும் ஏற்பட்டு விடும். இல்லையேல் என்ன நேருமோ கூற முடியாது. யோசித்து உடனே பதில் எழுதும்.

இங்ஙனம்

உமது நண்பன்"

கொள்ளித்தனமே கூத்தாடும் சுபாவ முடையவர்களின் வாயிலிருந்து வரும் எந்த சொல்லும் அந்த க்ரூரகாரம் கலந்ததாகவே வருகிறது. அதை மறைக்க எத்தனை முயன்றும் அவர்கள் சமர்த்து பலிப்பதில்லை.

நான்காவது

"ஐயா! தியாகமூர்த்தியே!

சென்ற முறை நீர் ஜமாபந்திக்குச் சென்றிருக்கையில் அங்கு ஓர் பெரிய குழப்பமும், பயங்கர சம்பவமும் நடந்தது தமக்கு நினைவிருக்கலாம். அந்த விபரீதச் செய்கைகளெல்லாம் உம்முடைய பகைவர்களால் வேண்டுமென்றே தயாரிக்கப் பட்ட ஓர் நாடகம் என்பதைத் தாங்கள் இன்னமும் அறியமாட்டீர்கள் என்றே நம்புகிறேன். ஐயா! நான் யாரோ ஓர் வழிப் போக்கனாக விருப்பினும் தங்களுடைய அபாரமான உத்தம குணத்தின்பால் அன்புகொண்டு இதை எழுதுகிறேன். அந்த நாடகத்தில் நடித்த கள்ளர்களைப் போலீஸார் பிடித்துவிட்டார்கள்.

பிடித்த சில தினத்திற்கெல்லாம் அந்த கள்ளர்கள் எப்படி மாயமாய் மறைந்துவிட்டார்களோ தெரியவில்லையாம். இச் செய்தி தெரியவந்ததும், அவர்கள் தப்பித்துக்கொண்டு விட்டதால் ஏதோ பெரிய அனர்த்தத்தை விளைவிப்பார்களோ வென்றும் நான் அஞ்சினேன். அதே போல அவர்கள் பலர் ஒன்றாக ஒரு கூட்டங் கூடி உமக்கும் உம்மைச் சார்ந்த இரு பெண்மணிகளுக்கும் பெரும் விபரீதத்தை விளைவிக்கப் போகிறார்கள் என்பதை நான் அறிகிறேன். தியாகமூர்த்தியே! அக் கூட்டத்தில் உம்முடைய சொந்த மனிதர்கள்கூட யாரோ சேர்ந்திருப்பதாகத் தெரிகிறது. எல்லாம், வயிற்றெரிச்சலும் கொள்ளித்தனமும், தாங்கள் உலகங் கொண்டாடும் நிலைமையிலிருக்கும் புகழைக் கண்டு பொறாமையினாலும்தான் இப்படி நடக்கிறது. எல்லாவற்றிற்குங் காரணம் பணந்தான் என்பதைக் கூறவேண்டுமா!

உண்மையான சினேகிதர்களைப் பறி கொடுத்த துக்கம் ஆறுவது வெகு கஷ்டம். எந்த நேரம் நினைப்பினும் அந்த சாந்த உருவம், சிரித்த முகம், விளையாட்டும் வேடிக்கையுமான பேச்சு, எல்லாம் கண் முன்பு தாண்டவமாடி "ஹா! நண்பா! இப்படி மறைந்து விட்டாயே!" என்கிற அபாரமான துக்கம் தன்னை யறியாது பொங்குகிறது. எல்லாம் அன்பின் காரணமே.

ஐயா! த்யாகத்வஜமே! தாங்களறியாத விஷயம் எதுவுமில்லை. தாங்கள் என்னை அறியாவிடினும் எந்த மனிதனும் பிறருக்குத் தன்னாலியன்ற உதவியைச் செய்யக் கடமை பட்டிருப்பதால் இதில் ப்ரவேசிக்கிறேன். இன்னொரு முக்ய விஷயம். சீக்கிரத்திலேயே அத்துஷ்டர்களால் தங்கள் பங்களாவில் ஓர் பெரிய பயங்கரமான சம்பவம் நடக்கப்போவதாகத் தெரிகிறது. உஷாராக விருக்கவேண்டுகிறேன். இங்ஙனம்

பரோபகாரி.''

ஐந்தாவது

"ஐயா! உத்தமரே! இக் கடிதம் எழுதும் நான் உமக்கும், உம்மிடம் வளர்ப்பாக விருக்கும் (செங்கி என்கிற) இன்பமணிக்கும் மிகவும் புதிய மனிதனாகவிருக்கிறேன். என் காலக் கொடுமையினால்—வயிற்று ஜீவனத்தின் நிமித்தம்—நான் என் மக்கள், மனைவி முதலிய எல்லோரையும் விட்டுக் கங்காணியர் வயப்பட்டு, கப்பலேறி அடிமைக்கூலியாகச் செலுத்தப்பட்டேன். நான் இதற்கு இடையில் பட்ட துன்பங்களையும் அடைந்த விசனத்தையுங் கூறப் புகின் இராமாயணமாகிவிடும். நான் இப்போதுதான் விடுதலைபெற்றுத் தாய்நாடு திரும்பினேன். வந்து விசாரிக்கையில் என் குடும்பமே சீர் கெட்டு அலங்கோலமாகிவிட்டதைக் கேள்வியுற்று மிக்க விசனித்தேன். பிறகு விசாரித்ததில் என் மகள் செங்கியை அவள் பாட்டி தமக்கு விற்று விட்டதாயும் இப்போது அவள் உம்மிடமிருப்பதாயும் ஒரு சாரார் கூறுகிறார்கள்.

மற்றொரு சாரார் கிழவியை ஏமாற்றி நீர் அபகரித்துக் கொண்டதாகவும் இப்போது அவளை நீர் துன்மார்க்க வழியில் உமக்கு உபயோகப்படுத்திக் கொண்டிருப்பதாயும் கூறுகிறார்கள். பின்னொரு சாரார் நீர் பல தர்ம காரியங்களைச் செய்திருப்பதாயும் அப்படியே என் மகளையும்,கிழவியையும் தர்மத்திற்கு ஆதரிக்க அழைத்துச் சென்றதாயும் கூறுகிறார்கள். இவைகளில் எது உண்மையோ அது கடவுளுக்குத்தான்

---

30 ரூபாய் சம்பளம் தன் மகன் வாங்குகையில் அதை நூறு ரூபாய் வாங்குவதாகத் தாயார் மார் தட்டிப் பேசுகிறாள். உள்ளது வெளியாகிய பிறகு பேப்பே என்கிற விழிப்புதான். பொய் கூறுவதில் முப்பது ரூபாய் நூறு ரூபாயாக மாறிவிடுமா!

தெரியும். அது எப்படியானாலும் ஆகட்டும். என் மகளைப் பார்க்க ஆசையாயிருக்கிறது. நான் போகவேண்டுமென்று தெரிவித்தேன். அதற்குச் சிலர் கூறுகிறார்கள் "நீ யங்கு சென்றால் யாரோ பைத்தியக்காரன், சோதா! என்று அடித்துத் துரத்தியோ, கொன்றோ போட்டுவிடுவார்கள்; ஆகையால் போக வேண்டாம்.'' என்று பயமுறுத்துகிறார்கள். எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. என் மனம் குழம்பிப்போய் தத்தளிக்கிறது. என் மகள் நினைவாகவே இருக்கிறேன். இதே கவலையில் நான் இறந்துபோய்விடுவேனோ என்றும் பயமாகவிருக்கிறபடியால் எது எப்படியாவது ஆகட்டும் இதை எழுதி உங்களுக்கே அனுப்பிவிட்டு நான் நேரில் வரலாம் என்று தீர்மானித்துத் துணிந்துவிட்டேன். நாளைய தினம் நான் வருகிறேன். என் மகளைப் பார்க்கவேண்டும்.

இங்ஙனம்

ரங்கநாதன்.''

மேற் குறித்த பேரிடி போன்ற ஒவ்வொரு கடிதத்தையும் இன்ப மணி உரக்கப்படித்து ரங்கமணியுங் கேட்டு இடி விழப்பெற்றவர்கள் போலானார்கள். "இதென்ன அனியாயம்! அப்பா! உங்கள் உத்யோக அதிகாரியா இக் கடிதம் எழுதி இருக்கிறார்....என் பிதாவா! இதென்ன ஒன்றன் பின்னொன்று புதை பாணம்போலக் கிளம்புகிறதே! இதுவெல்லாங் கிடக்கட்டும். முதல் கடிதமும், மூன்றாவது கடிதமும் எங்கள் மனத்தைக் கலக்குகின்றனவே! என்ன ஆபத்து நேர்ந்துவிடுமோ தெரியவில்லையே! அப்பா! இதற்கு நாம் என்ன செய்வது?'' என்று மணி தேம்பித்தேம்பி அழத்தொடங்கிவிட்டாள்.

ரங்கமணியோ இப்போதே பேரிடி தன் தலைமீது விழப்பெற்றது போலக் கலக்கமுற்றுத் தன் புருஷனின் இரு பாதங்களைப் பிடித்துக் கொண்டு "நாதா! இதென்ன அக்கிரமம்! பயங்கரத்திலும் கொடிய பயங்கரமாக விருக்கிறதே! என்ன செய்வது? எக்காலத்திலும் கலங்காத தமது உள்ளமே கலங்கிவிட்டதென்றால் எங்களைப் போன்ற கோழைகள் கதி யாதாவது? ஹா! கடவுளே! எங்களை இவ்வாபத்தினின்றும் ரக்ஷிப்பாயா! எங்கள் கவலையைப் போக்குவாயா! ஜகதீசா!'' என்று கதறியவாறு கல்லாய்ச் சமைந்துவிட்டாள். உத்தமரின் நிலைமை ஓர் உயிரற்ற சவத்திற்கொப்பாகவே இருந்ததென்னலாம். ஈசன் எக்கதி விடுவானோ!

சில சுபாவத்திற்கு எப்போதும் வேப்பிலை யடித்துக்கொண்டே இருந்தால் அவர்களின் உள்ளங் குளிர்ந்து தலைகால் தெரியாது கூத்தாடி தன் சரீரத்தையே செருப்பாக உழைத்து விடுவார்கள். இந்த தந்திரம் தெரிந்துகொள்ளாத சிலர் வீணான சண்டையும், மனஸ்தாபமும், த்வேஷமும் கொண்டு தவிக்கிறார்கள். இதில் உபயோகமென்ன.

ஜெயஸஞ்சீவி

இந்த நான்கணு நாவலில் நான்கு ரூபாய் பெறுமான நாவலிலுள்ள ருசி இருக்கிறது. நூல் முழுமையும் கற்பனைகளின் மயம். வளர்ப்பு என் பதேயில்லை. அவ்வளவும் கதை. நாத்தியின் கொடுமையும், வறுமை யின் தவிப்பும் உருக்கத்தக்கது. கணவன் இறந்தபின் தேட நினைக்கும் ஜீவனார்த்தம் கணவனுள்ளபோதே தேடிக்கொள்வது மேல். இப் பேச்சு சுலபம்; காரியம் கஷ்டந்தான். கதாநாயகனின் தீயோர் பழக்கமும், அதன் பொல்லாப்பும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. கதாநாயகிக்குத்தான் இந்த நாவலில் அதிக மரியாதை. அந்த நங்கையின் சமத்காரத்தால் ஒரு குடும்பமே புத்துயிர் பெறுகின்றது. இந்திராணியின் சமர்த்தெல்லாம் சக்தியிலாவது சந்தோஷமே. எங்கோ விட்டு விட்ட நாத்தியின் விஷயம் கடைசியில் வந்து கலந்து கொள்வது நல்ல கற்பனை. நூல் முற்றிலும் நல்ல புத்தி போதனைகள். தாய்க்கு அடங்கின பிள்ளையாகக் கதாநாயக னிருந்து க்ஷேமப் பட்டது மற்றவருக்கும் சிறந்த முன்மாதிரி யாகும். இந்த நாவலை அனைவரும் வாசித்துப் பார்த்து இன்புறுவராக. நயமான விலை.

182966

—அமிர்த குணபோதினி (மே' 34)

"ஜகன்மோகினி"யின் ஆசிரியையான ஸ்ரீமதி வை. மு. கோதை நாயகி அம்மாள் சிறு கதைகளை எழுதுவதிலும் தாம் வல்லவரென்பதை இதன்மூலம் நிரூபணம் செய்திருக்கிறார். இது உலகில் நடந்துவரும் விஷ யங்களில் சிலவற்றைப் படம் பிடித்துக் காட்டுவதுபோலிருக்கிறது துஷ்ட சகவாஸத்தால் நெறிகெட்டுப் போய்விடவிருந்த தாமோதரனை அவன் அன்னை நயத்தால் திருப்ப முயற்சித்தது பலனற்றுப் போகவே பயத்தால் அவனை நேர்வழிப்படுத்தியதும், எதிர்பாராதவிதமாகக் கிடைத்த சுவடிப் புதையல் மூலமாக அவர்கள் நல்ல ஸ்திதியை அடைந்ததும், அதைக் கண்டு பொறாமை கொண்ட அவனுடைய பழைய நண்பர்கள் பழி வாங்கும் எண்ணத்துடன் அவனை வஞ்சிக்கப் பல சூழ்ச்சிகள் செய்ததும், கள்ளக் காதலியின் மாய வலையில் சிக்குண்ட தாமோதரன் ஏமாந்துவிட விருப்பதை அறிந்து அவனிடத்தில் உண்மைக் காதல்கொண்ட ஸ்திரீ அவனைக் காப்பாற்ற முயன்றதும், கடைசியாக உண்மைக்காதல் வெற்றி பெற்றதுமாகிய விவரங்கள் ரஸமாக எழுதப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா நான்கே.

—சுதேசமித்திரன் (10—5—34)

நான்கு அணாவிற்கு
நான்கு ரூபாய் பெறுமான
ருசியுள்ள நாவல்!

அனுதாபம்.

நமது கௌரவப் பிரதிநிதியாக கல்கத்தாவில் இருந்த ஸ்ரீமான் R. வாசுதேவன் என்பவர் திடீரென்று அகால மரண மடைந்துவிட்டதானது திடுக்கிட்டலறச் செய்கின்றது. நமது **மோகினி** யிடத்தில் அளவு கடந்த அன்பு கொண்டிருக்கும் நண்பர்களில் அவர் முதன்மை ஸ்தானம் வகித்தவரென்றே கூறலாம். **அத்தகைய பெரியார் நமது மோகினியால் பிரதி பலன் சிறிதுங் கருதாது ஆற்றிய தொண்டினை மோகினியும், நாமும் என்றும் மறக்கவே முடியாது.** பத்திரிகை படிப்பில் அபாரமான ஆர்வமுடையவர். சினேகிதத்திற்கும், உபகாரத்திற்கும் மிகவும் பாத்திரமானவர். குழந்தைகளைப்போலக் கபடமின்றி சதா விளையாட்டாகவே பேசிக் கூடவிருப்பவர்களை மகிழ்விக்கும் ஆற்றல் படைத்தவர். **வெண்ணெய் திரளும் சமயம் தாழி உடைந்ததுபோல** அவருடைய குடும்பம் பெருகுங் காலத்தில் திடீரென்று அவர் மறைந்துவிட்டதானது அவரது குடும்பத்தினருக்கு ஆற்ற முடியாத துக்கத்தை யுண்டாக்கிவிட்டது.

அவரது ஆத்மா சாந்தி யடைக. எங்களுடைய அனுதாபத்தையும், நன்றி விசுவாசத்தையும் அவருடைய குடும்பத்தினருக்கு நமது **மோகினி**யின் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

Jaganmohini (May 1934) Regd. No. M. 2210

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் !!!

அமிர்தாஞ்சனம்

நாற்பது வருஷங்களுக்கு மேலாக முன்னணியில் நிற்கின்றது.

மற்றவைகள் இதைப் பின்பற்றித்தான் வருகின்றன.

லக்ஷக் கணக்கில் செலவாகின்றது

எல்லா இடங்களிலும் விற்கப்படும்.

ஏஜண்டு:
ஏ. பி. பாரெக்கு,
சைனா பஜார் ரோட்,
சென்னை.

அமிர்தாஞ்சன்
டிபோ.,
சென்னை கல்கத்தா
பம்பாய்.

PRINTED AT TATA PRESS, & PUBLISHED BY V. M. PARTHASARATHY, MADRAS.